# உள்ளுறை.

எண் பொருள். பக்கம்.


நான்முகம் நன்றியுரை, வாழ்க்கை விளக்கம் முதலியன I

## 1. குருமதிமாலை. 1–78

| | |
|---|---|
| அருட் பாடல்கள். | 1 |
| தன்னம்பிக்கை. | 31 |
| போசன விதி. | 33 |
| யோகாசன முறை. | 34 |
| கற்பசாதனம். | 35 |
| யோகப்பயிற்சி. | 37 |
| ஞானப்பிரகாசம். | 39 |
| மறைந்த மாணிக்கம். | 40 |
| கையும் மெய்யும். | 42 |
| ஆழ்ந்த தியானம். | 44 |
| நிறைந்த நிஷ்டை. | 45 |
| கபட சந்நியாசம். | 46 |
| கடவுள் என்பது உன் கடமையும் அறிவும். | 49 |
| மாணவர்கட் கறிவிப்பு. | 51 |
| வினு விடை. | 53 |
| நடைச் சிந்து. | 56 |
| யோக நெறியும் யோகாசனங்களும். | 57 |

## 2. திருப்புகழ் திரவியம். 79–110

| | |
|---|---|
| ஜெகன்மாதா ஸ்துதி. | 79 |
| நலனுற்ற நாட்டின் அமைப்பு. | 82 |
| இல்லறநெறியின் இயல்பு. | 84 |
| ஆரோக்கிய சரீரம் அவசியம். | 86 |
| அனுபவப் பெரியார் தொடர்பு. | 88 |
| தேசப் பணியே சிறந்தது. | 90 |

| எண். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| | நீதிவழியே புகழ்தரும். | 92 |
| | மாக்களறிவுடையோர் இயல்பு. | 95 |
| | தீட்சைபெற்றருளைச் சேகரி. | 98 |
| | பருவத்தி லருவத்தை உணரு. | 100 |
| | ஆனந்தம் அமைதியிலுளது. | 103 |
| | மாசற யோசனை செய்துணர். | 105 |
| | திருப்புகழ் திரவியம் வாழ்க. | 107 |
| | மிருக மனிதர் செய்கை. | 109 |
| 3. | பேரின்பக் குறள். | 111-138 |
| | இயற்கை. | 111 |
| | கல்வி. | 112 |
| | கடமை. | 113 |
| | ஆண்மை. | 114 |
| | பெண்மை. | 115 |
| | இல்லம். | 116 |
| | மணம். | 117 |
| | யாக்கை. | 118 |
| | வாழ்க்கை. | 119 |
| | அன்பு. | 120 |
| | நட்பு. | 121 |
| | நாடு. | 122 |
| | அரசு. | 123 |
| | மக்கள். | 124 |
| | சான்றோர். | 125 |
| | சபை. | 126 |
| | சற்குரு. | 127 |
| | நற்சீடர். | 128 |
| | தவம். | 129 |
| | துறவு. | 130 |

| எண். | பொருள், | பக்கம். |
|---|---|---|
| | முத்தர். | 131 |
| | பாதகர் இயல்பு. | 132 |
| 4. | நன்மதிகளும் மௌனானந்த மணி மொழிகளும். | 139—190 |
| | நன்மதிகள். | 139 |
| | மௌனானந்த மணிமொழிகள். | 154 |
| 5. | மரண சிந்தனையின் மர்மம். (மனதிற்கு உபதேசம்) | 191—212 |
| 6. | ஞானபண்டிதன். | 213–215 |
| | பீடிகை, கடமையின் உயர்வு | 213 |
| | வாழ்க்கை நோக்கம் | 214 |
| | இகபரம் தொண்டும் தொண்டரும் செயலற்ற செய்கை | 215 |
| | சன்மார்க்கம், உணவு நெறி, வேதாந்த சித்தாந்தம், கடவுள் நிலை | 216 |
| | ஆலய வழிபாடு, உலக வாழ்வு, சாதன சதுட்டயம் | 217 |
| | மந்திரம், கால நிகட்சிகள், வீரர்கள், அடியார் | 218 |
| | நரகமும் புண்ணியமும், முத்திநிலை. மக்களும் மாக்களும், ஊழிபயன் | 219 |
| | உயிர்ப்பலி, உபசரிப்பு, விஞ்ஞானி | 220 |
| | வாழ்வின் முடிவு, தவ நிலை, காயசித்தி, எமதூதர் | 221 |
| | கற்பு நெறி, சடங்குகள், வளம் பெற வழி | 222 |
| | சாதிப்பேய், மறுபிறவியுண்டா? வாழும்வகை, அகக் கருவிகள் | 223 |
| | எதிர்காலத் தேவை, சூது, சாத்திரங்கள், இராமனும், ஆத்மாராமனும் பத்துத் தலைகள் | 224 |
| | விக்கிரகங்களின் உடபொருள், ஐயமகலல் | 225 |

| எண். | பொருள். | பக்கம் |
|---|---|---|
| 7. | நிறைநெறி மொழிகள் | 226–229 |
| 8. | சீர்திருந்து மனிதா! | 220–237 |
| 9. | கருணைக் கண்ணீர் | 238–240 |
| 10. | கிருபைப் பிரகாசப் பொக்கிஷம் | 241–267 |
| | மக்கள் கடமை, திருப் புகழிசைப் பாடல் | 241 |
| | பாப்பா பாடல் | 243 |
| | ஆண்டவன் அருட் கீர்த்தனை<br>கையளவில்லாத இசை பாடல் | 243 |
| | மயிலே நீ போய் சொல்லி வா | 244 |
| | சாம்பவிமீதருட்புலம்பல் | 245 |
| | கண்மணிப் புலம்பல் | 247 |
| | ஞானசேகரச் சிந்து | 248 |
| | விகசித வெண்பா | 254 |
| | வினைதீர்த்தாள் பதிகம் | 256 |
| | அழகிய நாயகி அம்மன் பதிகம் | 258 |
| | ,, ,, கும்மி | 262 |
| | கன்னிக் கும்மி | 264 |
| 11. | தேசத்தந்தை காந்திஜியின் திருவருட் புலம்பல்- | 268-274 |
| 12. | அருளொளி மலர். | 277 |
| | கணபதித் தெய்வப்பாமாலை. | 277 |
| | ஆதீஸ்வரஜோதி விருத்தம். | 281 |
| | மகாமாரியம்மன் பதிகப்பாமாலை. | 284 |
| | கிருஷ்ணப்பாமாலை. | 294 |
| | மகாலெட்சுமி மாலை. | 296 |
| | பத்திரகாளியம்மன் பாடல். | 297 |
| | திரௌபதையம்மன் திருவெண்பா. | 301 |
| | திருமுருகன் புகழ்மாலை. | 302 |
| | சுவாமிகளின் சதோதய தரிசனப்பாடல். | 314 |
| | சுவாமிகளிடம் தீட்சை பெற்ற மாணவர்கள் பாடிய பாடல்கள். | 315—319 |
| | சுவாமிகளால் எழுதப்பட்ட பொன்மொழிகள் நிரம்பிய கடிதங்கள். | 320—330 |

பெற்று, அரசியலாரின் வழக்கறிஞர்களிடமும் நன்மதிப்பு வாங்கி, நமதனுபவ மொழிகள் பொதிந்த நன்னூற்கள் வெளிவர ஆரம்பித்தன.

## நூல் வெளியீடு

அறிவுக் களஞ்சிய திறவுகோலெனக் கருதப்படுகிற நன்னூற்களை நமது நாட்டிற்களித்த பெரியார்களின் திருநாமம் மறைவுறுதிருக்கிற தன்மைக்கு ஏற்ப, அடியேனுடைய வாழ்க்கை அனுபவத்தின் முடிவில் உணர்ந்த நலந்தீதிரண்டின் பலா பலன்களை சுருதி வாயிலாகத் தந்தருள வேண்டுமென, நமது மாணவ மாணவிகளெல்லாம் விரும்பியதற்கிசைந்து, அருள் பெற்ற நூலெனப் புகழ் பெற்ற நமது குருமதிமாலை முதலாக திருப்புகழ் திரவியம், பேரின்பக் குறள், நன்மதிகளும் மௌனானந்த மொழிகளும், மரண சிந்தனையின் மர்மம், ஞானபண்டிதன், நிறைநெறி மொழிகள், சீர்திருந்து மனிதா!, கருணைக் கண்ணீர், கிருபைப்பிரகாச பொக்கிஷம், பாரதத் தந்தை காந்திஜியின் திருவருட் புலம்பல், அருளொளி மலர் என வெளிய நடையில் சில நூல்கள் எழுதி உதவியுள்ளோம்.

## சூழ்ச்சியுடையோர்கள் வீழ்ச்சி.

பொறாமைச் சேற்றிற் கிடந்து, சதா புரண்டெழுகிற மக்களிற் சிலர் மறைமுகமாக இருந்து நமக்கு பல சூழ்ச்சிகள் செய்ய முனைந்தும், அவை யாவும் நமது அருளொளிச் சுடரில் அகப்பட்டு அழிந்ததோடு, அடாத விளையாட்டின் கபட நாடகக் கடமைகளும் சிதறிச் சிதைந்து சீர்கேடடைந்து தமது மனச் சான்றின் தண்டனைக்கு ஆட்பட்டுள்ளது கண்டு இரக்கமுற்று, நமது அருமைப் பாலர்களின் அறியாமையைப் போக்கி, பக்தர்களுக்குப் பகைவர்களில்லையெனப் பகுத்தறிந்து வசிக்க பாரத மாதா பரிபூரண அருளை அளிப்பாளென வேண்டி நின்றனம்.

## ஞான சபைகளமைப்பு.

புவிப் பொருளற்ற அடியேன் புகழிகழ் இரண்டையும் ஏற்று அறப்பணியாற்றத் துணிந்து, மதுரை, திருச்சி, (புதுச்சேரிக்கடுத்த) கம்பளிக்காரங் குப்பம், மலேயா, பினாங் போன்ற இடங்களில் அருளொளி ஞான சபைகளமைத்து, ஆத்மீகத் துறையிலிறங்கிக் கடமையை இடைவிடாது புரிந்து, ஏழை மக்களின் மனது கோழைபடாதபடி வீர மொழிகளை அள்ளி விசிறி, தாரக மந்திரமாகிய திடசக்தியை ஆடவர் பெண்டிரிதயத்திலிருந்து உதயமாகி ஒளிர்வதுகண்டு ஆனந்தமுறலாமெனவும் அவாவுற்று,

### அறிஞர்க்கு வேண்டுகோள்.

5. நற்றமிழறிஞ ரேல்லாங்
குற்றங்களிருப்பினிதைச்
சற்றும் மிகையேண்ணிடாரையா—சாம்பவி நம்மை
பேற்றவளருளுரையையா.

(க—ரை) தமிழிலக்கண ஆராய்ச்சிகளில் வல்லமைமிக்க அறிஞர்களே! எவற்றிலும் குற்றந்தென்படுவதியல்பே. ஆயினும் இச்சிறு நூலையும் நீங்கள் கண்ணுறுங்கால் பிழை காணின் இவையொரு மிகையாகாதெனக் கருதி உண்மையையுட்கொண்டு நன்மையுறுவது நலம்.

தமிழாராய்வோர் தரணியிற் சிறந்தோர்.

※ ※ ※

### நூற்பயன்.

6. மருதநில மக்களுக்குக்
குருமதிமாலைக்கு ளோரு
திருவேனும் போருளிருக்குது—படிப்பவர்க்கு
அருளோளி யருகிருக்குது.

(க—ரை) மருதநிலமக்களே! (மருதம்-வயலும் வயல் சார்ந்த இடமும்) இந்நூலாகிய மதிமாலையைக் கற்று தெளிவுற்றால், இலக்குமி கடாட்சமுண்டாகுவதோடு, அருள் ஞானப்பிரகாசமும் உங்களருகிருந்து நீங்கள் உயர்கதியடைய சன்மார்க்க வழிகளையுமுணர்த்து மென்பது வெளிப்படை.

உழுபயிர் சேய்நேறி வழுவாதிருமின்.

※ ※ ※

### மதிமாலை கற்றுணர்.

7. நேய்தல் நில மக்களுக்குச்
சேய்தோழிலேல்லாஞ் சிறந்து
தேய்வநிலையை நிறுத்துமே—இந்நூல் படித்து
எய்தலாமிறைவன் பாதமே.

(க—ரை) நெய்தல் நிலஞ்சார்ந்த மக்களே! (நெய்தல்-கடலும் கடல்சார்ந்த நிலமும்) உங்கட்கு இந்நூலின் வாயிலாக இயம்பிய உபதேச மொழிகளைப் பின்பற்றி உண்மையோடொழுகி வருவீர்களாயின், நீங்கள் செய்தொழில் விருத்தியும், தெய்வீக சக்தியுமெய்தப் பெற்றருளிறைவன் திருவடி நிழலுக்காளாகுவீர்கள். இவை பெரிதுமுண்மை.

கடலருகிருப்பவர்க் கிடர் பசி நோயில.

## இருகண்ணிடை நில்.

11. முத்து முகப்புக்குளொரு
குத்துவிளக்கிருக்கென
எத்தனையோ நூலெழுதியும் — அதையறிய
சத்தியின்றி யேனலையணும்.

(க—ரை) முத்துமுகப்பாகிய திரிபுடை ஸ்தானத்தில் குத்துவிளக்கெரிவதுபோலுனது ஆத்மதீபம் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறதெனத் தெளிவுற அளவுகடந்த நூற்களிலெழுதியும், அதன் உண்மையை யுணருமாற்றலின்றி உழல்கின்றாயே! அதிவிரைவிலுண்மையையறிய முற்படுவாயாக!

அன்றுமின்று முள்ளென்றும் நின்றேரியுது.

* * *

## கருத்துனதுள்ளிழு.

12. ஊனக்கண்ணை நீ மறந்து
ஞானக்கண்ணையே திறந்தால்
காணலாம் மௌன குருவை—மதியிழந்த
வீணரறியாத அருவை.

(க—ரை) உருவஉலகில் கிடந்துழலும் ஊனக்கண்ணை மாற்றியமைத்து, ஞானக்கண்ணைத் திறந்தாலன்றோ மௌன குருவாயிலங்கும் சைதன்யபிரகாசத்தை அறியவியலும். அவ்வாறில்லாது, அந்தகாரம் நிறைந்துள்ள கண்ணுக்கு உண்மையெங்ஙனம் புலப்படும்? என்பதை உணர்வாயாக!

அகக்கண் ணசைவுற முகக்கண் காரணம்.

* * *

## ஞானத் தெளிவுறு.

13. எங்குமே நிறைந்தொளிபோல்
கங்குகரையின்றி யொரு
பங்கமற்றிருக்கின்றதையா — அதேபிரமம்
தங்கிடுமுனதுளத்தையா.

(க—ரை) எங்கும் நிறைந்து கங்குகரையின்றி விபுவாய் (பரவெளியாய்) வியாபித்து பங்கமுறாது சதா உனதருகினில் காட்சியளிப்பது எதுவோ, அதே பிரம்ம சைதன்யமெனப்படும். சகல ஜீவராசிகளினிருதய சிதாகாயத்தில் நிறைந்துள்ளது மதுவே யென்றறிவாயாக!

நீக்கற்ற பிரமம் போக்கற்றுளது.

## இறையருள் பெறமுயல்.

17. உடலெதற் கெடுத்தது
கடவுளடிகாணவே
தடபுடலாயேனலையுருய்—தவம்புரிந்து
நடமிடும்நாதனைக்காணுவாய்.

(க—ரை) இம்மாயா உலகில் மனித ஜனனமெடுத்தது எதற்கென்ருல், நித்தியமாய் நிலைகின்ருேங்கும் பரம்பொருளின் பதமலரடி பெறவேயன்ருே? அதன்றி மனம்போன போக்கெல்லாந் திரிந்துழல்வது தகுதியாகுமா? நீ அருந்தவமியற்றி அரனருள் சேர அவசியம் முயல்வாயாக!

பூத ஜடத்தினுள் மாதவந் தோனுளான்.

⁂

## யோசித்துடன் செய்.

18. மாநிலத்திலே மனிதன்
ஏனிப்பிறந்திருந்தும்
வீணிலேயிறந்து போகணும்—எனச்சதாவும்
பேணியுன்னை நீயுணரணும்.

(க—ரை) பகுத்தறிவுற்ற மனிதப்பிறவியே மேம்பாடுடையதென இப்புகழ்பெற்ற பூமியிற் பிறந்து, அழிவுறுந் தன்மையாகிய வீண் பிரயோஜனங்களைக் கருதி சிலகாலம் வசித்து, ஏதோ சிறிது பயனடைந்து, இறுதியில் ஏன் மடிந்து போக வேண்டும்? எனச்சதா உன் பேரறிவைச் செலுத்தி ஆத்ம சிந்தனையிலீடுபடுவாயாக!

பிறந்தது மிருந்ததும் இறந்ததும் கணக்கா?

⁂

## அழியுமுன் ஒளியறி.

19. மாண்டு மண்ணுய் போவதற்குள்
ஆண்டவனருளொளியைக்
கூண்டினுள்குலாவு நீயையா—பவக்கடலைத்
தாண்டிமேலே போகலாமையா.

(க—ரை) காணுஞ்சடப்பொருள் யாவும் மாய்கையாய் மறைவதுபோன்று, உன்னுடலுமழிந்து ஒழியுமுன் அருளுலகிற்கேகும் வழியை அறிந்து, அற்ப உலக ஆசையைக் கடந்து கடைத்தேறி, இறைவனை உனது சிதாகாயத்தினுள்ளே அகக்கண்ணுற் கண்டுணர்வுறக் கூடிக்கொள்ளல் மிகவும் நலமேயாகும்.

பாவக்கடலை நீ தாவப்பழகு.

### உரம்பெறும் நரம்புணர்.

20. ஓடியுங் கோடி பொருளைத்
தேடியும் பயனிலையோர்
நாடிபோய் முடிந்தயிடமே—அதற்குளுனைக்
கூடிடிற் குணமுண்டாகுமே.

(க—ரை) திரைகடலோடித் திரவியம்தேடினும், ஆத்ம ஞானத்திற்கு அப்பொருளணுமாத்திரமேயாம். ஆகவே நீ பிரம்மநாடிபோய் முடிந்த இடத்தை சற்குருவாலுணர்த்த அறிந்து, அந்நடுநாடியினூடு சென்று இறையைக் கூடிக் குலாவிக் கொள்வாயாக!

நாடியையுனதுள் தேடித் தேளிவுறு.

※ ※ ※

### தூய்மையுடனிரு.

21. கள்ளமின்றியே வசிப்போ
ருள்ளமதிலே யிறைவன்
வல்லமைதனைத் தருமையா—அல்லாதப்பேரைக்
கோல்லயேமனும் வருமையா.

(க—ரை) கள்ளங்கப்படமற்ற காருண்யவான்களின் உள்ளத்திலிறைவன் பரிபூரண உணர்வோடமர்ந்து, வேண்டுவனவற்றைக் கடாட்சித்தருள் புரிகின்றார். மாசுற்ற கெட்ட மனதுடைய துஷ்டர்களின் உயிரைவாட்டி உடலைவிட்டேக நமதண்ணலே கூற்றுவனாகத் தோன்றுவானென்பதை அறிவாயாக!

வஞ்சகமற்றிரு நஞ்சுமமிர்தமாம்.

※ ※ ※

### கேசரிக்கேகு.

22. பாழுமா படுகுழியில்
வீழுமுன்னமே பகவான்
றுளினைப் பிடித்துக் கோள்ளையா—அழைப்பிற்சிறு
நாழிகைக்குளேகலாமையா.

(க—ரை) உலகப் பாசமாகிய பாழான படுகுழியில் வீழ்ந்துழன்றவதியுறுவதற்கு முன், எங்கும் வியாபித்திருக்குமிறைவனது பாதமலரடியைப் பற்றிப் பிடித்துக்கொள். உனதன்பையறிந்து, அப்பனழைப்பு வந்தால் நீ நொடிப்பொழுதில் பொன்னுலகம் போய்ச் சேர்ந்து கொள்ளலாம்.

உழைப்பினுலுனக்கு அழைப்பிதழ் வருமே.

### கடவுள் நீயெனக்காண்.

23. நெற்றிநிலைநின்று தவ
வெற்றியுறவே யுலகைச்
சுற்றியும் உண்மையறிந்திலை—குருவல்லாது
மற்றவரினுற் பயனிலை.

(க—ரை) நிருவிகல்ப சமாதிநிலையாகிய திரிபுடை ஸ்தானத்தினுள் உன்னருவ தெரிசனத்திலாழ்ந்து அதுமயமாக, ஆக அவாவுற்று உலகெலாமலைந்து திரிந்தாலும் பயன்படாது. ஆதலானுயர்குருவொருவரை நாடி, உண்மையையுணர்ந்து கொளல் மேன்மை. குருவில்லாச் சாதனை கைகூடாதென்பது பெரிதுமுறுதி.

வெளிச்சமுனக்குள் பளிச் சென்றேளிரும்.

※ ※ ※

### பற்றற்றிரு.

24. இந்நிலவுலகில்மாந்த
ரேன்னுடையதேன்பதேன்ன
தன்னுயிரையாவுடலையா—அதன்விபர
மின்னதேன நீயறியையா.

(க—ரை) இம்மாயா உலகிற்பிறந்த மானிடரெல்லாம் எப்பொருளையுமென்னுடையதெனச் சொந்தம் பாராட்டுகின்றூர்களே. எனது என்று உரிமையோடு சொல்லும் வஸ்து எது? உயிரைச் சார்ந்ததா அல்லது உடலைச் சேர்ந்ததாவென நீ சற்று நிதானித்துப்பார்.

உடலேது உயிரேது திடமுடனறிந்துணர்.

※ ※ ※

### பந்தமே படுகுழி.

25. பேண்டுபிள்ளை சுற்றமேனக்
கண்டுநீ களிப்பதேல்லாம்
நின்றுனை நிலைநிறுத்துமா—நமனேறியுங்
குண்டுதான் விலகிப் போகுமா.

(க—ரை) உலகில் மக்கள், பெண்டீர், உறவு, தன தான்யமென்பவற்றைக் கண்ணுற்கண்டு களிப்புறுங் காட்சிகளுள் கூற்றுவன் கொடிய பாசக்கயிற்றை வீசும்பொழுது, எவை உனது முன்னின்று உதவிபுரியும்? இவையனைத்துமநித்தியமென நிச்சயித்து, சத்தியத்தைவிடாது பின்பற்றுவாயாக!

எமனுறும் பொழுதேதும் உமதேதிர்நில்லா.

### குருபணி மிக நலம்.

26. உண்டது முறங்கினதும்
மாண்டதுமல்லாது வேறு
கண்டபலனொன்றுமில்லையே—குருமகானின்
தொண்டனுயிருந்தாயில்லையே

(க—ரை) அறுசுவையுடனுண்டு, உறங்கி, சுகித்துப் பின் மடிந்து போவதல்லாமல் வேறேதேனுமோர் நற்கதி அடைய மார்க்கமெதுவும் நீ அறிந்ததாயில்லையே! ஆனலினி மேலும் வீண் காலம் கடத்தாது ஒரு குருமகானையடுத்துத் தொண்டுபுரிந்து உண்மையை யுணர்ந்து கொள்வாயாக!

உருவமழியுமுன்சற் குருவையறிந்துணர்.

※ ※ ※

### அழிவதிவ்வுடலே.

27. எத்தனை வயதிருந்துஞ்
செத்திடுவோமென்றுனது
பித்தின்னுந் தெளியவில்லையே—எமதருமை
உத்தமா நீயின்னுங்கேளாயா.

(க—ரை) ஆண்டுபலவாக ஜீவித்திருப்பினுமொருநாள் மடிந்து போவது உண்மையாதலால் இம்மாயாவிநோத உலகி லன்னை நீங்காத பித்தாகிய சந்தேகமின்னுந் தெளியவில் லையா? நமதன்பிலுயரிய உத்தமனே! நமதரிய உரையைக் கற்றதன்வழி நிற்கக் கடவாயாக!

இன்றோ நாளையோ என்றே மரணம்.

※ ※ ※

### சொகுசிலோர் சுகமில.

28. ஆடையுமத்தர் பன்னீரு
வாடையுமணிந்துபல
சாடைபேச வேண்டாமையனே—உடல்சுமக்கும்
பாடையோன்றிருக்குதையனே.

(க—ரை) உன்னதமாகிய உடுப்புகளை உடுத்தி, வாசனைத்திரவியங்களை நாற்ற உடலிலணிந்து, நவநாகரீகமான பாதாளப் படியிலிறங்குதல் தகாதெனவொழித்து, இறுதியில் இகவாழ்வைக் கடந்து பாடையிலேறி இடுகாடேகுமுடலை சிறிது சிந்தித்து, ஆடம்பரமின்றி நடுநிலைமையாக வாழ்க்கை நடாத்தல் உன்போன்றவர்களுக்கழகல்லவா?

வாடைகள் புனையினும் பாடையிலேறணும்.

## சினமதைத்தவிர்த்திரு.

32. ஆபத்தைப் பரிசளிக்கும்
கோபத்தை அடுத்திருந்தால்
சாபத்துக்குனேயழைக்குமே— விலங்கினங்கள்
ரூபந்திலுயிர் போய்புக்குமே.

(க—ரை) கோபத்தையே கூட்டாளியெனக் கருதிய ஆசாமிகளுக்குக் கைம்மாறு எவையென நீயறிய உரைப்போம். அதாவது பெரியார்கள் சாபமும், பிறவிப்பிணிமிகுந்த பாவமுமொருங்கே சேர்ந்து, ஆபத்தைத் தருவதோடு, கோரத்தனமான மிருகவுடலிலுயிர்போய்புக்கி, மேலுமுலகில் ஜனனமெடுக்கவுமேதுவாகுமென்பதை அறிந்தடங்குவாயாக!

கோபந்தவிர்த்திடில் ஆபத்தொழியும்.

※ ※ ※

## ஆகாதவசரம்.

33. சாத்திரச் சுவடிகளை
மாத்திரம் படித்துனது
ஆத்திரங்கள் தீரவில்லையே— பாடலிலுள்ள
சூத்திரமறிந்தா யில்லையே.

(க—ரை) நட்சத்திரகாண்டமுதல் பல நன்னூற்களை யெல்லாம் புரட்டிப்படிக்கின்ற வேலையேயல்லாது, உன்னோடுறவாடிப் பார்க்குங்கால், உனததிகார மமதைகளின்னும் ஒழிந்தபாடில்லையே! காரணம் யாதெனக் காண்கின், எட்டுப் பிரதிகளிலெழுதிய உட்கருத்தை அறியுமாற்றலின்றி, அசத்தைக் கிரகித்து சத்தை விட்டொழித்த கதைபோன்றிருக்கிறது. அப்படியல்லாது உண்மையை நாட முற்படுவாயாக!

பாராயணஞ் செய் தாராய்ந் தொழுகு.

※ ※ ※

## காதல் நோக்காகா.

34. திண்ணையிலிருந்து வுந்தன்
கண்ணது தெருவிலாட
என்னென்னமோ கீதம்பாடுறாய்—பலவிதமா
யுன்மனங்கொண்டேதோ நாடுறாய்.

(க—ரை) தெருத் திண்ணைகளில் எதேச்சையாயிருந்தேதோ மனதிலுதயமாகும் வீண்பாடல்களைக் கடவுள்மீது பாடுவதுபோற் பாசாங்குசெய்து, கண்ணும், மனமும் வீதிகளில் எதையோ காண்கின்றதாகத் தோற்றமளிக்கின்றதே! ஈதென்ன விந்தை!! இவ்வாறில்லாது நீ இறைவனை ஒருமனதுடனடைய முற்படு.

உருக்கமா யழுது அருட்கவி பாடு.

### மடியால் குடிகெடும்.

38. சோம்பல்குடி கொண்டுவெகு
டாம்பீகம தாயலைந்து
வீம்புபேசுதல் தவறையா—சடலமேலாஞ்
சாம்பலாகிப் போகும்பாரையா.

(க—ரை) சோம்பலை மேற்கொண்டு வெளியிற் சிங்காரித்து வீண்வம்புகள்பேசி வாதாடி முறையில்லாத மார்க்கத்தில் நீ பிரவேசித்து காலங்கடத்தி, இறுதியில் கெட்டழிந்து போகாமுன் ஆத்மஞானத்தை அறிய முற்படுவாயாக!

சோம்ப லகன்றவர் மேம்பட வாழ்வர்.

※ ※ ※

### பீதி பேயாய்வரும்.

39. பேயென்றும் பிசாசென்றுமே
வாயினல் வழுத்துவது
நோயிலாதபோது இல்லையே—கடன்கழிக்க
தாயினலனுப்புந் தோல்லையே.

(க—ரை) இப்பயங்கர உலகில் பேய், பிசாசு, பில்லி சூனியமென அறியாமையாற் பிதற்றுவது நோய்வாய்ப்பட்டுழலாத காலத்தில் கிடையாதே! எனினுமிவையாவும் அன்னையினேவலால் கொடிய பாதச் சேவகனுகிய நோயை அவரவர் தேடிய வினைவசத்தை வசூலிக்க அனுப்புகிருளென்று நீ யுணர்வாயாக!

பில்லி சூனியங்கள் இல்லவே யில்லை.

※ ※ ※

### கவலையே காலன்.

40. காட்டிலே மலையும் நல்ல
நாட்டிலே கலையியற்கைக்
கூட்டிலே உயிர்வசிக்குமே—குடும்பமென்ற
வீட்டிலே கவலையார்க்குமே.

(க—ரை) காட்டிலே மலைகளும், நல்லறிஞர்கள் கூடிய நாட்டிலே உயரிய கலைகளும், உலகிலுள்ள ஸ்தூல உடல்களுக்கு உயிர்களும் அமைந்துள்துபோல, குடும்பமாகிய இல்லத்திலே கவலை இருப்பது யாவர்க்கும் இயற்கையே. இதையுணர்ந்து இல்லற துன்பங்களிலீடுபட்டு உன்மனதை மாசுறச் செய்யாதே!

வீட்டுச் சஞ்சலமீடு காட்டுக் கிழுக்கும்.

### மிக மகிழ்வோடிரு.

41. கவலையென்ற வாழ்விலோர்
திவலையேனும் சிக்கினல்
பவமதிகம் சூழ்ந்துகோள்ளுமே—எமவலைக்கு
ளேவரையுமழைத்து யேகுமே

(க—ரை) கவலையென்ற மேற்கூறிய கொடிய வினையிலோர் அணுவளவேனுஞ் சிக்கிக்கொண்டால், அதன்மூலம் பாவங்கள் உன்னைப் பீடிப்பதோடல்லாமல் எமபாசத்திற்குள்ளுமுன்னை அழைத்துக்கொண்டு செல்லும். ஆகவே கவலை என்னுங் காலன் மிகக் கொடியதென்று எண்ணி, அதையகற்றுவாயாக!

சஞ்சல முனதிடங் கோஞ்சமு மாகா.

※ ※ ※

### அமைதியே ஆனந்தம்.

42. அகமுகமாய் நாடினல்
சகமுகமங்கில்லை நற்
சுகமுனக் குதயமாகுமே—கவலையெலாங்
ககனவழியோடிப் போகுமே.

(க—ரை) உனது கவலைகளெல்லாமொழிந்து, நற்சுகமுண்டாகி, அகமகிழ்வுறுவதற்கான வொரு மார்க்கமுளது. அதாவது குரங்குபோலங்குமிங்கும் ஓடியாடி விளையாடும் உனது மனதை தியானுனுபவத்தோடு ககன மார்க்கமாகிய பிரமத்தில் ஐக்கியமடையச் செய்தால் ஜெகத்துன்பமற்றிருக்கலாம்!

தேளிவாயகத்திரு வேளியி லேகாதே.

※ ※ ※

### விலைமகள் உறவறு.

43. தேசீகன்மீதாசை யற்று
தாசிகள்மே லிச்சையுற்று
காசினியேலா மலைவதேன்—இறையருளின்
ஆசியை மறந்தழிவதேன்.

(க—ரை) இறைவனிடத்தில் நீ யடையக்கூடிய பேரின்பத்திலிச்சையற்று, கெடுமதிகொண்ட விலைமகளின்மேலுள்ள அழிந்துபோகக்கூடிய அற்ப இன்பத்திற்காக அவளுடனுறவாடி மதிமயக்குற்றலைந்து, பலரும் சண்டாளனென இகழும்படியாக உலகெலாம் சுற்றி அவமே கெட்டழிந்துபோகாது காலாகாலத்திலே கடவுளினருளைப் பெற்றுனந்தமுடனிருப்பாயாக!

இழிதோழில் புரியின் பழியோ டழிவுறும்.

## நவவழிதனையடை.

62. நாக்கைமேல்மடித்துவச
மாக்கிடவன்மையுண்டானால்
தாக்கலாம்சுவாசமதனைக்— கபாலத்திலுண்
டாக்கலாம் பிரகாசநாதனை

(க—ரை) அண்ணாக்கை உள்நாக்கோடேற்றி கபால வெளியை யடைக்குந்திறமை உனக்குண்டாகப்பெறின், சுவாசத்தைக் கபாலத்தில் தாக்கி, பிரகாசனாகிய பரமனை ஆங்கறிந்து உண்மை காணலாம். நீ அவ்வழியை சதா பின்பற்றுவாயாக!

வாசலுமடைபட ஈசனுள்நடமிடும்.

✲ ✲ ✲

## எக்குவதுயிர்நிலை.

63. மூலமதை மேலேயேக்கிக்
காலதைப்பிடித்தடைத்தால்
ஆலமுண்டோனையறியலாம் –அவனருமை
பாலனாயுலகில் வாழலாம்.

(க—ரை) சதாகாலமும் அபானத்தை மேலேயெக்கி நிறுத்தப் பழகுவதோடு சுவாசத்தை மார்க்கபந்தனஞ் செய்தப்பியாசித்தால் விஷமுண்ட கண்டனாகிய சிவபெருமானை அறிவதோடவனுடைய அருமைப்பாலனாகவும் திகழலாமென் பதுறுதி.

மேலாம் நிலைக்குயர் மூலாதாரமே.

✲ ✲ ✲

## அருளில் நின்றாடு.

64. நாவினைமடித்துயர்த்தி
ஆவியை நிறுத்தியூதத்
தேவியுன்னைத்தேடுவாளையா— அவளொளியில்
தாவிவிளையாடலாமையா.

(க—ரை) உனதுநாவை மேலேமடித்து, கபாலவெளியை அடைத்து, நடு நாடியை சதா ஊதிப்பழகிவருவாயானால் அன்னை சாம்பவி அதிவிரைவிலிறங்கி வந்துன்னை ஆட்கொள்வதோடு, அவளருளொளி நிழலில் நின்று நீ விளையாடலாம்.

துருத்திபோன்றுவியை நிறுத்தியுள்ளூது.

### ஆசானவசியம்.

65. மூச்சுஇழுத்துள்ளடைத்துப்
போச்சுதுயிரேன்றுசோல்லி
பேச்சதாயிருக்கிறதையா—இப்படிப்பட்ட
கூச்சலுமுலகில் வீணைய்யா.

(க—ரை) நாசியின் வழியாய் வாசியை இழுத்து வயிற்றி னுள்ளடைத்து, அதேதருணம் உயிர்போய்விட்டதென்று பல ரும் பல திக்குகளிலும் பேசக்கூடிய வீணன கூச்சலுக்கு நீ ஆளாகாது, மேற்கூறிய மார்க்கங்களை ஆசானருகிருந்து உணர்ந்த அவை பின்பற்றியுனது பிறவிப்பிணியை வேர றுத்து வெற்றிபெறுவாயாக!

குண்டலி துயிலெழக் கண்டறிபாதையை.

⁂ ⁂ ⁂

### தவம்புரிந்தருள் பெறு.

66. பாரினிலனுதினமோர்
சூரியனுதிப்பதுபோல்
நாரிபங்கனுள்ளிருக்கின்றார் — தவமியற்றார்
யாரிதையறியப் போகின்றார்.

(க—ரை) பாரினில் பகலோன் தோன்றி மறைவது போன்று பரமேஸ்வரனும் மன்பதைகளிடம் சதாதோன்றி யொடுங்கும் மாயத்தை, உபாயத்தோடுயரிய தவமியற்றாதார், எவர்தான் கண்டு களிப்புறவியலும்?

ஆதியுள்ளருவமாம் ஜோதியுன்வடிவு.

⁂ ⁂ ⁂

### பவம்புரிவதை விடு.

67. தவமேனுஞ்சுவாலையில்
பவமேரிந்துபோன்றிடும்
சிவனருள்சுரந்து தோன்றுமே—அல்லாதவர்கள்
சவம்போலிருப்பரேன்றுமே.

(க—ரை) மகத்துவமிக்கத் தவத்தைப்பெருக்கி பிரகா சிக்கச் செய்பவர்கள் எவர்களோ, அவர்களதியாமற்றேடிய ஊழ்வினைகளனைத்தும் நசுக்கப்பெற்று ஆனந்தமுடன்றிகழ் வார்கள். தவம்புரிவது தகாதெனக் கருதுமிக்கலிகாலத்தில், மக்கள் ஜீவனோடிருந்தும் செத்தவர்களுக்கொப்பாய்க் கருதப் படுகிறார்கள்.

அந்தகார வினைகளை வேந்தழிந்தேகச்சேய்.

### பொய்க்குருகண்டகல்.

71. நாசிரேண்டி லோன்றைமூடி
வாசியோகம் செய்து நாங்கள்
காசிசென்று வந்தோமேன்பரே—கபடநீறு
பூசிவேடம் போடும்வம்பரே.

(க—ரை) நாசியையடைத்து வாசியோகம் செய்து வன்மை பெற்று, காசி முதலிய முக்கியஸ்தலங்கள் சென்று வந்தோம், எங்களாலாகாதது உலகிலொன்றுமில்லை யென்று கபடமாக திருநீற்றை அணியும் கயவர்களைக் கண்டு, அவர்களை நம்பி மோசம் போய்விடாதே!

**வேடத்தைக் கண்டு நீ மோசம்போகாதே.**

※ ※ ※

### பாவிகள் தொழிலிகழ்.

72. தாடியுஞ் சடையும்வெகு
மோடியாய்ப்புனைந்து உனைத்
தேடிடும் வாயாடி நிரம்பவே—அவர்களுடன்
கூடிடிற் குற்றங்கள் நிரம்பவே.

(க—ரை) தாடிதாழ, சடையும் நெளிந்து சுருள் சுருளாய்த் தொங்க, வெகு பயங்கரத் தோற்றத்துடன் பின்னுலிரண்டொரு சிஷ்யர்களையுமழைத்துக் கொண்டு, உன்னைப் பார்க்கவரும் பாமர நடிகர்களைக் கண்டேமாந்து போனல், அவர்கள் மூலம் நீ பலதுன்பத்திற்காளாகுவாய்.

**ஆலம்பாலால் சடை நீளமாய் வளரும்.**

※ ※ ※

### ஞானிசீர் மோனமே.

73. அரகரா கோவிந்தாவேன்னும்
முரசோலி துறவதல்ல
பரமனருளற்ற பாவிகள்—மௌனிஎன்போர்
பிரமஞானசீர் சஞ்சீவிகள்.

(க—ரை) அரகராவென்று ஓலமிடுவது முரசு போலொலிக்க ஆடிப்பாடி வரும் கும்பல்களைத் துறவிகளெனச் சொல்வது எவ்வாறு பொருந்தும்? பரமனருளைப்பெற நெறி முறையுணர்ந்து கொள்ளாத பாவிகளாகிறுர்கள். எனினுமொருசிலரே இவ்வுலகில் மௌனஞானியாயிருந் திறைவனடிகண்டு சிறப்புற்றுத் திகழ்கிறுர்களென்பதை நீ யறிவாயாக!

**அம்பலவாணனைக் கும்பல்களறியார்.**

### வம்பர்களுறவறு.

74. ஞானமோன மென்றுமனம்
போனவாறு சொல்வதல்லால்
வானருள் சுரந்தோரில்லையே—இப்படிப்பட்ட
வீணபாரெல்லார்க்கும் தோல்லையே.

(க—ரை) ஞானம், யோகம், மௌனம் என்றெல்லாம் மனம் போன போக்கில் புலம்புகின்றார்களேயன்றி அன்னையினருள் பெற்றோரில்லையே! இப்படிப்பட்ட கள்ளக் கயவரொருவர்க்குத் தீங்கு செய்ய மக்கள் உண்மையானவர்களையும் உதாசினஞ் செய்கின்றார்களே. இது தருமாவென உணர்ந்து, கயவர்களைக் கண்டு திருத்த முற்படு.

வாய் ஞானம் பேசிப் பின் பேய்போலலையேல்.

※ ※ ※

### அருளுடையவர் குரு.

75. காரணக் குருக்களேன்று
தோரணப் பெயர்களிட்டுப்
பூரணப்பொய் சொல்லும் பாவிகள்—புழுபுழுத்து
நாறணுமப்பச்சைநாவிகள்.

(க—ரை) காரணக் குருக்களெனப் பெயர்களை அழகாகச் சூட்டிக்கொண்டு மக்களை யேமாற்றும் சண்டாளர்கள் பொருளீட்டக் கருதி பொய்யும் புரளியும்பேசி இறுதியில் நரகவாதனையுற்றிறப்பார்களென்பதிலையமில்லை.

கள்ளக்குருக்கள் அல்லல் விளைப்பர்.

※ ※ ※

### சாதிபற்றியிகழேல்.

76. ஓதியு முணர்ந்தும் பல
நீதிகளறிந்தோ மென்பர்
சாதிபேதம் பேசுவதுமேன்—அவர்களுக்கு
போதிய மதியிலாததுதான்.

(க—ரை) கற்றுத் தெளிந்த கலாவல்லுநர்களும்கூட நீதி தவறி ஜாதிபேதத்தை இன்னுமுச்சரிக்கின்றார்களே! காரணம் இவர்கள் கற்ற கல்விக்கேற்ப ஆராயுந்தன்மை கிடையாதென்பது அங்கைக் கனிபோல் தெளிவுறுத்துகிறதன்றோ! ஆனால் நீ அனைவரையுமுனது இனத்தாரெனக் கருதுவாயாக!

நீதிகளறிந்தபின் சாதிகளேது.

### மதவெறி அதர்மம்.

77. மன்மதத்திஞலே தாயார்
தன்வயிற்றிலே பிறந்தோம்
என்மதமொன் றெங்கிருப்பது—இனிமேலதை
எண்ணிஞல் பிசகிருக்குது.

(க—ரை) மன்மதமென்னும் (பூசாரச் சத்துள்ள) அப்பனுக் குடந்தைபட்ட அன்னையின் வயிற்றில் ஜீவனனைத்தும் ஊழ்வினை வசத்தாலுற்பவிக்கின்றன. இதையுணராது என்மதம், உன்மதமென்று போரிட்டு மடிதல் மிகவுந் தவறு என்பதை நீயறிவாயாக.

தீண்டாமதமெனவ் வேண்டாமினிமேல்.

✲ ✲ ✲

### வேற்றுமை வேண்டாம்.

78. அண்டை அயலென்றுலகில்
சண்டைகள் பிடித்தறிஞர்
விண்டதை மறுத்துரைக்கிருர்— முதுமொழியைக்
கோண்டிடாப் பிளவுண்டாக்குரூர்.

(க—ரை) தானே உயர்ந்த ஜாதியென்றும், மற்றோரெல்லாம் தாழ்ந்த ஜாதியென்றும் மதத்துவேஷங் கொண்டு வீணான சண்டை சச்சரவு விளைவித்து, தவமிக்க அறிஞர்கள் சொல்லுமரிய திருவுரைகளையும் மறுத்து, பாமர மக்களுள் பல பிரிவினைகளை யுண்டாக்கும் மானிடர்கள் இம்மகிதலவுத்தமராக மாட்டார்கள்.

அயலாரெனவோரு செயலாருளரோ?

✲ ✲ ✲

### கெடுமதி ரணகளம்.

79. ஒற்றுமை களற்றுலகில்
வேற்றுமை குடிகோண்டதால்
கூற்றுவன் குருதியுண்கிருன்— உயிர்பிடிக்க
சாற்றேறணுத்துயருளாழ்கிருன்.

(க—ரை) இம்மாயா உலகிலே ஒற்றுமைகளற்று, வேற்றுமை வேரூன்றியதால் ஒருவர்க் கொருவர் அநீதமாகச் சண்டைகளியற்ற, அதுவே பெரும் நெருப்பாக, உலகமழிந்து போகும்படியாகக் கூற்றுவன் இரத்தங் குடிப்பதோடு, அன்னவர்களினுயிர்களை ஒடிப்பிடிக்கவும் ஓய்ந்து போகின்றுனே.

ஒன்றேன்றிருந்தேதும் நன்றேன்றுளமகிழ்.

### தயைகடைப்பிடி.

89. மச்சங்களையும் பறக்கும்
பட்சிகளையும் வதைக்கு
மிச்சடலமேன்ன நிலையா—அபாயமது
நிச்சயமதாயிருக்கையா.

(க—ரை) உலகிலுயிர் மயங்கொண்டுலவும் ஜீவன்களாகிய பட்சிமுதல் மச்சங்களனைத்தையும் வதைத்துண்டு வாழ்க்கை நடத்துமிச்சடமென்ன நிலையாகுமா? உயிரை வதைத்துண்டு உயிர்சுமந்து திரிவதென்ன மேன்மையா? இவ்வூன உடலுக்கும் அருகிலபாயமுண்டென சிறிதுணர்ந்து ஜீவவதையற்றிருத்தல் நலம்.

அஹிம்சை கடைப்பிடித் திம்சையகற்று.

※ ※ ※

### பொதுவிதிகளையுணர்.

90. நாகைநாதனைக்காணணும்
ஆகையாலினிமேலேனும்
ஈகையோடிருப்பீர்களையா—வேற்றிமேல் வேற்றி
வாகைசூடி வாழ்கலாமையா.

(க—ரை) அன்புமயமான ஆதிபரம்பொருளையறிவதற்கு உலகிலெவரும் உரிமையுடையவர்களேயாதலால், வினையுலக வாழ்க்கைக்கடலை நீந்தி கரையேறுவதற்குரிய மார்க்கம் எவையெனின், சிவகாருண்ணியம் பெற்றுத் திகழ்வதொன்றேயாம்.

மாய்கையை மாய்க்க ஈகையைக் கடைப்பிடி.

※ ※ ※

### அருளறிந்தடங்கு.

91. அத்தனையறிந்தஜீவ
முத்தர்களுமிவ்வுலகில்
பித்தரைப்போலுந்திரிவரே—அவர்கள்சதா
நித்யலோகத்தில் வசிப்பரே.

(க—ரை) பசுபதிபரமனாகிய இறைவனை நேரிலுணர்ந்த நின்மலமாகிய ஜீவன்முக்தர்கள் பூதஜடத்தோடவர்கள் தோற்றமளிப்பினும், அறிவுச்சுடராகிய அவர்களான்மா நித்ய லோகத்தில் சதா ஆனந்த பரவசமடைந்து கொண்டிருக்குமென்பதை இவ்வநித்திய உலகில் யாரறிவார்கள்?

ஞானிக்கழகுனம் பேணிக்கோளலே.

## அறிவிழந்தாடேல்.

92. சேத்தசவம் போன்றிருந்து
நித்தியந்தவம்செய்யாது
சித்துவிளையாடல்மோசமே—இதுபேரிய
சத்தமுழுமுடர்வேடமே.

(க—ரை) தயாபரனருளை நாடித்தவமியற்றி பலனெய்த வேண்டுவதிருக்க, செப்படி வித்தைக்காரர்கள்போன்று, மக்களறிந்து மகிழ்வுறத்தக்க சித்துக்களை விளையாடி இறுதியில் சீரழிந்துழல்கிறார்களே! சித்து விளையாடல் முத்திக்குத் தடையென்ற முதுமொழிகளையுணராத இவர்கள் கதி அதோகதியாம்!

வித்தைவேதாந்திதான் சீத்துகளாடுவர்.

⁂

## பசியறிந்தாற்று.

93. ஐயனே யெனதருமை
மெய்யனேயில்லறமக்கள்
ஐயமிடவேண்டுமென்பரே—செயலளவிற்
செய்திடவேண்ணுதுவுண்பரே.

(க—ரை) இப்பொய்வுலகில் வாழும், புகழுடம் பெய்தாத மக்கள், தானதருமங்களைப்பற்றி வானளாவப் புகழ்ந்து வெற்றுரையாடுகின்றார்களே தவிர, செயலளவில் அன்னமிடுவதொன்றுதானில்லை. அவ்வாறில்லாது இயன்றளவு பசியென்பவருக்கு பரிந்தன்னமளிக்க நீயேனும் முற்படுவாயாக.

ஈகையென்றுரைப்பதைச் செய்கையிற் செய்தல்நலம்.

⁂

## அறநெறிபிசகேல்.

94. அன்னதானம் செய்பவர்க்கு
பொன்னுலகமேபொருந்தும்
உன்னியமுன்கூடிவருமே—தருமதேவி
தன்னிடங்குடியிருக்குமே.

(க—ரை) தானத்திற் சிறந்தவை அன்னதானமேயென்பதை உணர்ந்து, பசியென வருபவர்களுக்கு இல்லையெனக் கடிந்துரையாடாது, கூழமுதேனுங் குணமுடன் வார்த்து இன்னுரை பகர்ந்தனுப்பும் புண்ணியவான்களுக்கு தருமலட்சுமி அருகிலிருந்து வேண்டுவனவற்றை ஈந்து இறுதியில் பொன்னுலகமுங் கிடைக்கச் செய்வாள்.

அன்னக்கொடைகோடு பொன்னுலகுறலாம்.

### சொற்செயலுறுதிகொள்.

95. இல்லறதருமமேன
எல்லவருமிப்புவியில்
சொல்லளவிலே புகழ்கிறுர்—பசியேன்ருலோ
நில்லாதே செல்சல்தியேன்குறுர்.

(க—ரை) இல்லற தர்மத்தின் தன்மையையுணராதவர்களனைவரும் உண்டு சுகித்து உல்லாசமாயிருக்கும்பொழுது "ஐயமிட்டுண்" என்ற நம் பிராட்டியார் அருளிய முதுமொழி ஞாபகத்திற்கு வந்துவிடும்போலும். அச்சமயததிலன்னதானத்தின் தோற்றம் அன்னவர்கள் கண்முன்னுல் காட்சியளிப்பதும், மறுகணத்தில் யாரேனுமன்னங் கேட்டாலதட்டித் துரத்துவதுமாகச் செய்யுமிச் செய்கை தருமமாகுமா?

தருமந்தவிர்ப்பவர் மிருகமாய்ப்பிறப்பர்.

⁂

### உணவைப்பகிர்ந்துண்.

96. பசித்தவர்கள் பார்த்திருக்க
புசித்திருக்கும் பாவிகட்கு
விசித்திரவீடேங்கிருக்கையா—நமனுலகில்
வசித்திருக்கச்சோல்வது போய்யா.

(க—ரை) பசியினுல்வாடி பரிதாபகாமான நிலையிலிருப்பவர்களைக் கண்ணுற்றும் இறையளவேனுமிரக்கமின்றி மனைவிமக்களோடுண்டு சுகிக்கின்றுர்களே! இவ்வுத்தமர்களுக்கிறுதியிலென்ன கைம்மாறு கிடைக்குந் தெரியுமா? நரகலோகத்தில் முதல் வீடு கிடைக்குமிதுதானுண்மை.

அன்னமிடாதவர் புன்னரகடைவர்.

⁂

### கலையறிவுயர்த்து.

97. அறிவேனும் விளக்கோளிக்
குறிசிரமிருக்கின்றதைத்
தேரிவதுமுனக்குரிமையே—ஒழுக்கமதைப்
பிரிந்திடாதிருத்தல் நன்மையே.

(க—ரை) அருளொளி நின்று விளையாடுமிடத்திற்கு அடையாளமாக சிரசே சீவன்களனைத்திற்கும் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றின் மர்மத்தை ஒழுக்கமான நெறியில் கற்றுணர்ந்து கொள்ளின் உனதறிவு பிரகாசிக்கப்பெற்று ஆனந்தமுறலாம்.

சிரசில்நுண்ணறிவு ஆசியல்புரியும்.

## அரசர்க்கன்பே செங்கோல்.

101. மாந்தருள்மகிமையுற்ற
வேந்தனுயிருப்பினும்சீர்
சாந்தமே சிறப்புற்ருேங்கணும்—குடிகளிடம்
பாந்தமாகவே பழகணும்.

(க—ரை) இம்மகிதல மக்களில் மிக்க பெருமையுடன் தேர்ந்தெடுத்துக்கொண்டாடுகின்ற மன்னர்களாயிருப்பினும், சாந்தமெனும் பொறுமையைப் பூஷணமாகப்பூண்டு, குடிகளிடம் நட்புரிமையோடு பழகி நேசித்து நீதியோடாட்சி புரிதல் வேண்டும்.

நிலைதவருக்குணம் தலைவரின்சால்பு.

⁂

## நீதிபின்பற்று.

102. இல்லையேல்பலவிதத்தில்
தொல்லைகள் விளைத்தரசை
எல்லவரும்கோள்ளைகோள்வரே—அரசுடையர்
வல்லமையுங்குன்றி வீழ்வரே.

(க—ரை) மேற்கூறியவாறல்லாது மக்களை பல அல்லல்களுக்காளாக்கினுல், அவ்வரசும் இடரூற்று வல்லமைகுன்றி பிறர்வசமாகுமென்பது மிகையாகாது. "குடிகள் திரண்டால் கொற்றவனேது" என்பதற்கொப்பாய் முடியுமல்லவா? ஆதலால் நிதானந்தவறிநுலெவையிலும் நிலைதவறி நிற்க நேரிடுமென்பதை அறிதல் நலம்.

குடிகளாலரசும் இடிசுவாரும்.

⁂

## மழையுலகமுதம்.

103. விண்மழைபொழிந்துலகில்
மண்ணுயிர் பிழைப்பதெல்லாம்
புண்ணியபயனின்ருகுமே—தருமமென்ற
நண்ணியதவத்தின் தியாகமே.

(க—ரை) அரிய பெரியார்கள் புரியும் தவமேன்மையாலும், கருணையுள்ளமுடையோர்கள் சிலரியற்றிய சிறந்த புண்ணியத்திஞலும் (தருமத்திஞலும்) விண்ணின்று மழை வருஷிக்க மண்ணுயிர்களனைத்தும் மகிழ்வுடன் வாழ்க்கை நடத்துகின்றன!

ஜெகத்தினிலுயிர்க்கு மகத்துவந்தவமே.

## உதித்ததை ஒழியேல்.

107. அங்கிருக்கு திங்கிருக்கென்
றுங்களுக்குச் சொன்னதைநா
மிங்கெடுத்துரைத்திருக்கின்றோம்—மதிமாலையை
தங்கம்போல் மதிக்கச் சொல்கின்றோம்.

(க—ரை) பற்பலவாறு சிதறிக்கிடந்த இரகசியங்களை யெல்லாமொன்று சேர்த்து, மிகத் தெளிவுடன் சுருக்கமாக பாமரர் முதலறியும் பொருட்டு எளியநடையி லெடுத்தியம்பி யிருக்கின்றோம். அருளுக்குரிய குழந்தைகளாகிய அனைவரும் இந்நூலை பசும்பொன்பதிந்துள்ளதென மதித்து, பாதுகாத்துப் படித்து அதன்படியொழுகி இன்புறுவீர்களாக.

சுருக்கமிதனுள் இருக்குதரும் பொருள்.

※ ※ ※

## வினைவசம் விடுமா?

108. சாதனை செய்தால் மனது
வாதனையடங்குமெனப்
போதனைகளைத்தான் சொல்லலாம்—முன்னூழ்வினையின்
சோதனைக்கு என்ன செய்யலாம்.

(க—ரை) ஞானமார்க்க சாதனையில் ஒரேநிலையாய் நின்றால், உனது மனவேதனையகன்று பிறவிப் பிணியையும் வெல்வதற்கான வல்லமையுண்டாகுமென அதற்கான உயரிய சன்மார்க்கப் போதனைகளைத்தான் எடுத்துப் புகட்டலாம். ஆனாலவரவர் ஊழ்வினைவசம் முன்னின்று போராடும்பொழுது நாமென்ன செய்யலாம்!

ஊழ்வினையோடுங்க பாழ்மனமடங்கும்.

※ ※ ※

## நாட்டுப்பணிபுரி.

109. மொத்தமாய் நூற்றெட்டு நல்ல
ரத்தினமணிபொறுக்கிக்
கோத்துமாச்சரப்பளிசெய்து—கொடுத்துதவும்
சித்திர முத்தன்பணியிது.

(க—ரை) நாட்டுமக்களுக்கேற்றவாறு நவமணிகள்போல நூற்றெட்டுப் பாடல்களை சரப்பளி போலாக்கி, அருள்வடிவிற் கடியன் சித்ரமுத்தன், சிவஞானச் செல்வர்களாகத் திகழ விரும்பிய நல்லடியார்களுக்கு அளித்த முதற்பணியாம்!

சீரசினுள் ஒளிர்விடும் மாசுதமணி அறி.

(குரு)

உடலை நிலைநிறுத்தி யுலகத்தில் வாழவல்ல
கடவுளடி காணவே —குழந்தாய்
கற்பமிது அற்புதமாம் -குழ-

(மா)

அற்புதமானயிந்த அமிர்தத்தை நாமருந்தி
சொற்பநாளில் மடிந்தால் —குருவே
சுகமொன்று மில்லையன்றோ -குரு-

(குரு)

கற்பமதை யுண்டாலென்ன காயசித்தி பெற்றாலென்ன
அப்ப னழைப்பு வந்தால் —குழந்தாய்
அவசியம் போய்விடணும் -குழ-

(மா)

போய்விட வேண்டுமென்று புகன்றிட்டீர் சுவாமிகளே
காயிலுதிர்ந்து விடில் —குருவே
கனியுண்ப தெவ்விதமோ -குரு-

(குரு)

கனியுண்ண வேண்டுமெனில் தனிமையாய் நீ தவஞ்செய்
முனிவனுமாகிடலாம் —குழந்தாய்
மோசமுனக் கில்லையடா -குழ-

(மா)

மோசமில்லை யென்றுரைத்த மாசற்ற என்குருவே
ஆசையை வேரறுக்க —குருவே
அதற்கேதும் மார்க்கமுண்டோ -குரு-

(குரு)

பாருக்குளிருக்கும்வரை யாருக்குமே ஆசையுண்டு
மார்க்க மறிந்தாயானல் —குழந்தாய்
மனம்நிலை நிற்குமடா -குழ-

(மா)

நிற்கும் நிலையுரைக்க பக்குவம் எனக்கில்லையோ
எக்காலந்தான் செல்லுமோ —குருவே
என் எண்ணமது ஈடேறுமோ —குரு—

(குரு)

ஈடேற வேண்டுமெனில் ஓடாதே அங்குமிங்கும்
கூடான உன்னுடலில் —குழந்தாய்
குடியிருக்க நீ பழகு -குழ-

## நலனுற்ற நாட்டின் அமைப்பு.

— பல்லவி —

தனன தன தனன தன
தனன தன தனன தன
தனன தன தனன தன - தனதான

பேரறிவுடைய செல்வர்களே! பின்வரும் பாடல்களை, இலக்கண ரீதியில் எதுகைமோனை கிடையாதேயெனக் கருதி விடாமல், அருணகிரிநாதர், பதஞ்சலி முனிவர், திருப்புகழுக் கொப்பாய் ஆனந்தக் களிப்புடன் பாடிப் பொருளையுணர்ந்து புண்ணிய பிராப்திக்காளாகுங்கள்.

இந்நூல் அறிவுக்குறைவிடம்.

⁂

பிழையகல மழைபொழிய
விளைவதிக முயர் பெரிய
மனிதருள தவநாடு...நாடாகும்.

(க—ரை) காலமழை பெய்து கழனி விளைவுற்று குற்றஞ் சிதைந்து, நற்றவமுயர்ந்து, அறிஞர்கள் மிகுந்துலவும் நாடுதான் நன்னாடாகும். இல்லையேல், அந்நாடு காடெனவே கருதப்படும்.

நீதி நிழலைப் பற்றி நில்.

⁂

அரசரிய மதியூகி
யதியுன்னத படைகுடிக
ளுயர்நீதி வழுவாத...ததுதேசம்.

(க—ரை) கடமை வழுவாத நியதியும், மடமையிருளற்ற மக்களும், வீரசுவர்க்கம் விரும்பிய படைகளும், விவேகம் மிகுந்த அமைச்சரும், அரனருள் பெற்ற அரசனும், அமைந்த தேசமே சிறப்புடையதாகும்.

கடமையைக் கண்ணெனக் கருது.

புதல்வர்பல பெறுவதினு
லதிலதிக விசனமுள
சிலதநய ருயர்மதியால்...புகழோங்கும்

(க—ரை) ஆகாத பிள்ளைகளை அளவுகடந்து பெற்று அல்ல லுறுவதைப் பார்க்கினும், ஒரு சில மக்களையீன்று உன்னதமார்க்க மறிவித்து நற்கதியடையச் செய்தலே பெருமையாகும்.

தந்தைதாய் பாதந்தழுவு.

⁂

பசிதணிய உணவுமுத
லுடைகள் கொடையளியதனுல்
நசியுமுன தகங்கார...மொடுபாவம்

(க—ரை) இடுகொடுவென்ற உண்மையுணர்ந்து, உண்ண உணவும், உடுக்க உடையும் நிதானமறிந்து பரிசளிப்பாயானுல், அரனருள் ஓங்கி, அறியாமையாற் செய்த பிழை நீங்கப் பெற்றுப் பசியாறிச் சென்ற மக்களின் வாயுரை வாழ்த்துக்கும் உரித்தாகு வாய்.

பகிர்ந்தன்ன முண்ணப் பழகு.

⁂

பொறுமைதனை யிழந்தரிய
குருவுரையின் வழிதவறி
வறுமைகுடிகொண்டலைவர்...வெகுகோடி

(க—ரை) புவிப்பற்றற்ற குருபிரானுணர்த்திய நல்வழி தவறி பொறுமையிழந்து, பொருமையுற்று ஏழ்மை குடிகொண்டு இல்லக்கிழத்தியோடலைபவர்கள் அனந்தகோடி.

குருவினை யுறுதுணையாக்கு.

⁂

கலியுலக மிதனில்நடு
நிலைமையொடு வாழ்பவர்கள்
கவலைபிணி யணுகியுழல்...நிலையாகார்

(க—ரை) இன்ப துன்ப மிரண்டையும் நண்பனுகக்கருதி, நடுநிலையாக வாழ்பவர்கள் இக்கலியுலக உழல் நிலை சூழ்ந்து பெரிதும் பாதிக்கப்படமாட்டார்கள்.

பழிப்புறப் பாரி லுலவேல்.

## அனுபவப் பெரியார் தொடர்பு.

வயதிலதி முதிய பொதி
யுடலிலொரு பயனிலகல்
லறிவினுய ருடையவரோ...டுறவாடு

(க—ரை) அந்தி பகலாக அறுசுவை யுணவுகளை யருந்தித் தொந்தி பெருத்த பூதஜடலங்களைக் கண்டு, அறிவுமிகுதியிருக்கு மெனக் கருதிவிடாமல் சிறிய உடலேயாயினும் அறிவினுயர்வும் அனுபவ முதிர்ச்சியுங் கண்டு கலந்து உறவாடு.

சற்சன ருறவு பூண்.

* * *

அறிவினுய ருடையவர்க
ளெவரெனினும் பெரியவரே
சிறுமதியோ ரடவிவளர்...மாமாகும்

(க—ரை) பேரறிவுடைய பெரியார்களெவரும் மரியாதைக் குரிய மகத்துவ முடையோராகும். பகுத்தறிவற்ற பாமரரெவ ரும் வனத்திற் பெருத்த மரத்திற் கொப்பிடப்படுவர்.

விற்பன விவேகியாகு.

* * *

இறுதிவரை யுறுதியுள
பெரியதகை யுடையவர்கள்
பருதிமதியது போலிறை...யடிசேர்வர்

(க—ரை) நற்றவ வழியிற் சற்றும் பின்னடையாத பொறு மைக் கடலுக்கொப்பாகிய புண்ணியவான்கள், இறுதி எல் லையை அணுகும்வரை நின்ற நிலை பெயராது அரியதவம் புரிந் திறையடி சேர்வர்.

அன்புட னறநெறி தழுவு.

## தேசப் பணியே சிறந்தது.

கலகநிலை யுலகமிதில்
நலமெதென வுனதறிவா
லகவெளியி லுணர்வதுயர்...கடனாகும்

(க—ரை) கட்சிப்பிளவுகள் மிகுந்த தற்கால நிலையையு ணர்ந்து, அகவிழி திறந்து ஆராய்ந்து, ஆவன செய்யமுனைந்து ஒழுக்கங் காத்துப் புவிப் பணி புரியப் புறப்படு. அவையே நினது கடன்.

பலர் தொழும்படிக்குப் பணி செய்.

⁂ ⁂ ⁂

கடமை புரிவதிலுறுதி
திடநிலையை யுடையவரே
மடமையிருள் நீங்கினநல்...லதிதீரர்

(க—ரை) அறியாமையந்தகம் நீங்கிய தீர புருடரே, திடவைராக்கிய வாளாயுதந்தாங்கி ஏற்ற கடமையைச் சிறிதும் வழு வாது ஒரு நிலை நின்று செய்துமுடிப்பர். மற்றவர் திறனற்றவர்.

அச்சமற் றடக்கம் பேண்.

⁂ ⁂ ⁂

உதயாதி முதலுனது
இதயாதி கமலமலர்
சிதையாத விதமுணர்கண்...மனதார

(க—ரை) அல்லும் பகலுமாக இயற்றத் துணிந்த கடமை யின்கண், இலட்சியக்குறி வைத்து முடிக்கவேண்டும். அப்படிக் கல்லாது, உலகப் பராக்கிலுழன்று இதயசிதாகாய உறுதியைத் தளரச்செய்து கொள்ளாதே.

கேள்வியில் கவனம் செலுத்து.

## தீட்சைபெற்றருளைச் சேகரி.

இறுதிமுடிவ திலுனது
நாதஒலிநீ யெனவே
சுருதிமுடிவது புகல்வர்...குருவாகும்.

[க—ரை] நாதமும் விந்துவும் நாமேதானெனக் கூர்ச் சுருதி முடிவான பொருளைச் சுட்டிக் காட்டிச் சொல்லாமலே சொல்லி உன்னை உனக்குணர்த்துபவர்தான் உனது ஆன்ம குரு நாதர். அதற்கடையாளம் அவர்மீதுனக்கு ஆனந்தமேலீடதிக முண்டு!

### காரணக் குருவைத் தேடு.

※ ※ ※

ஜெகமுழுது மொருகணமுள்
ளகமதனி லறிகுருவை
நிகரிலிறை யெனவேதுதி....புரிவோமே.

[க—ரை] இமைக்குமுன் இகபரமிரண்டையும் ஒளியுலக காட்சி வடிவாகக் கண்டு உறவாடி, உலகிலுலவும் உத்தமக் குரு தேவனை, இறைவனவதாரமெனக் கருதி சதா அவர் பொன்னடி தொழுது பூஜிக்கலாம்.

### காசிர வணக்கஞ் செலுத்து.

※ ※ ※

மவுனமணி மொழிகளையே
செவியுணவுபெற பெரிதும்
மனமகிழ உரைசெய்குவ...ருபன்யாசம்.

[க—ரை] செவிக்குணவாகத் தித்திக்கத் தக்க அமுத மொழிகளைச் சதா மனமகிழ்வுடன் மவுன சைதன்ய வீடுற்ற ஆசான் உபன்யாசஞ் செய்தவண்ணமாகவே இருப்பார்.

### உத்தம மார்க்கங் கேளு.

## பருவத்தி லருவத்தை உணரு.

அழபுதல்வருனை யேசக்
கிழவடிவுதிரை நரைகள்
வருமுனமே குருபணிசெய்...விரைவாக.

(க—ரை) நற்றவம் புரிந்து பெற்றுவளர்த்த புதல்வர்களும் திட்டியிகழுமாறு திரை, நரை, பிணிகளணுகி கிழவடிவுற்று மடியுமுன், பருவதசையிலேயே ஒருயரிய குருபிரானையடுத்துத் தொண்டுபுரிந்து நற்பதவி நாட்டத்தைப் பெற்றுக்கொள்

## தபசியை அவசியம் வணங்கு.

※ ※ ※

காசிரமோடுடல் வளைய
அடியவர்களடி தொழுது
படியின் மிடியகலநல்ல...வழிகேளு.

[க—ரை] பற்றற்ற பரமசாதுக்களாகிய ஜீவன் முத்தர்களைக் கண்டால், அவர்கள் திருவடி போற்றித் துதித்து அங்கமொடுங்க ஆவனசெய்து, இம்மாயா உலக மயக்கை யொழிக்க மார்க்கமுளதா வெனக் கேட்டுத் தெரிந்து கொள்.

## அருந்தவ வழி பின்பற்று.

※ ※ ※

மயிரிழை போலுயிர்குறுகி
வயிறுபொருமி யிருமியுடல்
மடியுமது தருணமதி...லெதுவாகும்.

[க—ரை] ஜீவான்மா சிறுத்துச், சேட்டுவ மிழுத்துக், கோழையடைத்து வயிறாதி உயிர் பிரியுந் தறுவாயில் எக்காரியங் களையும் சிந்திக்கவோ செய்யவோ, முடியாது போகும்.

## கடவுளை உடலினுள் ளுணரு.

# திருப்புகழ் திரவியம் வாழ்க!

ஜடவுலக கெடுமதிகள்
படயிறைவ னருளொளிமா
மடமதிலித் திருப்புகழை...மிகவோது.

(க—ரை) துரியபூமிக்கு துணைவியாகிய நமதன்னை சாம்பவியினருள்பெற்ற மடாலயங்களில், மக்களின் அறியாமை நீங்கி அருள் குடிகொள்ளுமாறு நமது திருப்புகழ் திரவியமாகிய இவ்வரிய நூலை, மிக இன்னிசையுடன் பாடிப் பதம்பிரித்துரைப்பீர்களாக!

கலைவேது பயிலமுயலு.

⁂

திரவியமி தரனருளின்
பிரணவமு மொளிர்கநிலம்
பரவிகம திறைவிதுணை...புரிவாளே.

(க—ரை) அழியாப் பொருளாய்க் குறையாச் செல்வமாய், துகளற்ற மணியாய்த் தேடாத் திரவியமாய்க் கிடைத்து, அருளுருத் திரண்ட பொன்மொழிகளை, ஆங்காங்கும் அருட்பிரகாசச் சுடரொளி வீசுமாறு பலருமுணர்ந்து, பாரில் பரவ நமது பரிபூரண ஜெகன்மாதா துணைபுரிவாளாக.

உள்ளத்துள் உறவுசெலுத்து.

⁂

சதுரகிரி மதுரபுவி
தனில்வளரும் நமதுகவி
மகிமையது ஒளிர்வதொரு...சிலநாளில்.

[க—ரை] முத்தமிழோங்கிய ஜெகதல மதுரையம்பதி நாட்டின்கண், புதியமுறையிலுதயமாகிய நமதருள்மொழிப்பாக்கள், மக்களிதயத்தில் மாணிக்கமாகத் தோன்றி உணர்ச்சிப்பிரவாகத்தில் குதித்துவிளையாடச் செய்யும் நந்நாள் அண்மையிலுள்ளது.

சத்தியம் சத்தாய் திகழும்.

திருமகளுக் கடிமையுள
அடியனுறை நகரழகங்
குளமெனயிப் புவிபுகழ...மிகைகூறு.

(க—ரை) தண்டாமரையாளின் தாளடி நருடி, அன்றூட வாழ்வையுமவளுக்கே அர்ப்பணித்து குன்றாக் குணமலை சார்ந்த சான்றோர்க் குடல் வணங்கி, உண்மை புகன்று புவிப்பொரு ளற்ற அடியேனிருப்பிடம், அழகேசராஜன் ஆட்சி புரிந்த அதி யுன்னத அழக நகரெனப் பெயர் பெறும்.

அழகிய கருஊர் நமதூர்.

※ ※ ※

தனன தன தனன தன
எனநல்லிசை தனிலிதனை
தனையுணர்பவர்கள் படிப்ப...தழகாகும்.

(க—ரை) தன்னையுணர்ந்து தானே தானுகி நிற்கத் தகுந்த பேரின்பப் பிரியர்களே! ஆனந்தமுடனருளிய, இத்திருப்புகழை இன்னிசையெழுப்பி அழகுடன்பாடி அருளருவி சிந்தி அரன் அருளை அடைவீர்களாக.

உணர்ச்சியோ டுண்மையை நாடு.

※ ※ ※

நமதரிய பாரதபுவி
வளமுறவல் வினையகல
வழிதொடர்வ ரடிதொழுவ...னடியேனும்

(க—ரை) நமது புண்ணிய பூமியில் பொல்லாததுபோக்கி, நல்லது வாக்கிப் பழமுதிர் சோலையாய் வளம்பெற்றுலகில் புகழ்பெற் றுயர்கடனுற்றிட, வழிபற்றிய வருங்கால வாலிபர் களுக்கும் எதிர்கால இளைஞர்களுக்கும், அடியேன் கரசிர மொடுங்கிய வணக்கம் உரித்தாகுக! ஏற்றின்புறுங்கள்!!

தொண்டரைக் கண்டு வணங்கு.

# 3. பேரின்பக் குறள்.

## இயற்கை

1. உலககுரு ஒருவ னிறைவன் அவனருளால்
பலபொருளும் பாரி லுள.

(கருத்துரை.) இச்சக ஜீவராசிகளனைத்திற்கும், தானே தலைவனெனத் தமது திருவடி நிழலில் யாவையுந்தோற்றி, ஒடுங்கச் செய்கிற இறைவனொருவனே குருபிரானுகும்.

2. கடல்மலைக ளாறு கதிர்மதியும் விண்பூமி
உடனெருங்கு சேர்ந்த துலகு.

(க—ரை.) கடல், மலை, ஆறு, சூரியன், சந்திரன், ஆகாயம், பூமியாகிய எழுவித இயற்கையைக் கொண்டிவ்வுலக சிருஷ்டி அமைந்துள்ளதெனச் காண்க.

3. நீர்நெருப்பு மண்வெளியோடாவி இவையைந்தும்
சேர்ந்துளதிவ் வூனவுடல்.

(க—ரை.) தண்ணீரும், மண்ணும், காற்றும், நெருப்பும், வெளியோடமைந்து எண்ணற்ற ஊனுருவங்கள்தோன்றிதொழில் புரிகிற தெனவுணர்க.

4. புணர்ச்சியின்பம் பார்வை கேள்விகட்கு இவ்வூனுட
உணர்ச்சிதந்து நிற்குமுயிர் [லில்

(க—ரை.) புகழ், இகழ், புலனுகர்ச்சிகட்கெல்லாம், ஆதாரமாகிய உயிர் உடலிற் கலந்துறவாடி உணர்ச்சிமயமாக நிற்கின்றது என உணர்க.

## கடமை.

9. உடலுருவம்பெற்ற எவரும் திடமுடனே
கடமையறிந் தாற்றிவருக.

(க—ரை) உடல் பெற்ற பயனை உணரச் செயலற்றிருந்து விடாமல், ஒவ்வொருவரும் திடசக்தியோடு செய்வனவற்றைச் செவ்வையாகச் செய்து ஜெயம் பெறுக.

10. ஊக்கமொடு பணிகள்செய்து வருபவர்கள்
எக்கமுறவெழ்மை புரியார்.

(க—ரை) உறுதிபூண்டு உலக நலனுக்குழைக்க முன்வந் தவர்கள், எக்காலத்தும் இதயந் தளர்ந்து ஏற்றபணியைக் கைவிடத் துணிய மாட்டார்கள்.

11. செய்கடமையாவுஞ் ஜெயமாகும் என்றுனது
மெய்யைமிக நம்பிகட.

(க—ரை) செய்யத் துணிந்த கருமம் வெற்றி தருமென எண்ணி தளராத தன்னம்பிக்கை யுற்று, முயற்சி வழுவாதிருப் பின் விரைவினில் பயன் பெறலாம்.

12. கடமை கடமையெனப் பேசி பயனென்றில
திடனுறுதி பெற்று உழை.

(க—ரை) சொல்லளவிலுள்ள கடமை பயன் தராதெனக் கண்டு செயலளவிலிறங்கித் தீவிரமாகவுழைத்து மனிதராகப் பிற த மாண்பை மாநிலமறியச் செய்க.

## ஆண்மை.

13. சித்தத்திடமுடைமை யின்றேல் அவரிருந்தும்
செத்தபிண மாகப்படும்.

(க—ரை) அஞ்சாத நெஞ்சமும், அதிதீவிர பக்குவமுமில்லாதவர்களால் என்ன பயன்? அன்னவர்களுடல் இருந்தும் இறந்ததாகவே கருதப்படும்.

14. ஏழைகளாய் வாழலா மிப்புவியில் கூடாது
கோழைகளா யுள்ளமனிதர்.

(க—ரை) பரம ஏழைகளாயிருப்பினும் மனமாசற்ற பாட்டாளி மக்களுக்கு எதிர்கால உலகில் இடமிகுதி கிடைக்கும். ஆனல், கோழைகளுக் காங்கிடங் கிடையா.

15. வனத்திருந்து வேங்கை பாய்ந்தாலும் அஞ்சாத
மனத்திடனே மந்திரமதாம்.

(க—ரை) உடலும் மனதுந் திடனுற்றஉத்தமர்களை, கானக வேங்கைகளும் பாய அஞ்சுமென்பதிலேயமில்லை. மனத்திடம் மந்திர சக்தியிலும் சிறந்ததெனக் காண்க.

16. வீரமொடு மக்கள் திகழ்ந்தால் உலகாட்சி
தாரகமாய் நிற்க விரும்பும்.

[க—ரை] ஆண் பெண்ணனைவரும் வீரமுடையவர்களாகப் பிரகாசிக்கின்ற காலத்தே, உலக சுயாட்சி யுறுதியாகி அசையா நிலை பெற்றிருக்குமென்பதாம்.

## வாழ்க்கை

**33.** உற்றுறவினர்கள் சூழ்ந்த குடிவாழ்க்கை
குற்றமின்றிச் சுற்றம் பெருகும்.

(க—ரை) பந்துமித்திரர்களோடுறவாடி யார்க்கும் சத்துருவாக நடவாதிருக்கிற மக்களின் வாழ்க்கைக்கு, உறுதுணையாக சான்றோர்களின் நட்பும் பிரகாசிக்கும்.

**34.** இன்பமொடுதுன்பந் தோன்றின் புவிவாழ்வில்
நன்மையதிலுண்டெனவே காண்.

(க—ரை) சுகதுக்கமிரண்டையும் சமபாவனையாக ஏற்று உள்ளத்தில் ஒளிரும் வல்லமை சற்றும் குன்றாதபடி, யாவும் நன்மைக்கெனவே மகிழ்ந்து வாழ்ந்திடுக.

**35.** உணர்ச்சியுடனிருந் துயிர்வாழும் உத்தமர்கள்
இனத்தையகலாமலிரு.

(க—ரை) மண்ணுலக வாழ்விலீடுபட்ட மக்கள் எக்காலத்தும் எச்செயலிலும், உணர்ச்சிப் பெருக்குள்ளவர்களாகத் திகழ்வதுகண்டு அவர்களோடுறவாடி வசி.

**36.** வாயளவிற் பேசி வலுவிழந்து போகாமுன்
செயலளவிற் செயலைச்செய்.

(க—ரை) பேச்சளவில் தற்பெருமை பேசிப் பேதைபோன்றலைவதைப் பார்க்கிலும் சிறிதளவேனும் சத்கடமைகளைச் செயலில் செய்வதுவே ஆண்மையாகும்.

## அன்பு

**37.** அறநெறி பின்பற்றியுலகில் உளவரையும்
பிறர்நலனைப் பேணியுலவு.

(க—ரை) அன்பினால் ஆனந்தம் லபிதமாகுமெனக் கண்டு, பொதுநலனுக்காக கனிந்த உள்ளமும் கருணை மனதுமுடையவர்களாகத் திகழ்தல் வேண்டும்.

**38.** உருக்கமுடனுணவும் உடைமையும் மிகவீய்ந்து
இருப்பவர்கட்கென்றும் புகழ்.

(க—ரை) வறுமையறிந்தழைத்து உணவும் உடையுங் கொடுத்தாதரிக்கின்ற உத்தமர்களன்றோ, இப்புவியுலகிலே, பொன்னுலகப் புகழெய்தப் பெறுவர்.

**39.** வறுமைபிணி நீங்குமாறு மனதிளகித்
திருவளர நற்சேவை செய்.

(க—ரை) பசிப்பிணி முதல் உடற்பிணிகள்வரை நீங்குதற்கு வேண்டிய நல்லுதவிகளைத்தந்து சேவை செய்தலே, நாட்டுக்குகந்த தொண்டர்களின் நற்கருமங்கள்.

**40.** கூழமுதமெனினுங்கொடுத்துப் பசியாற்றின்
வாழ்விலுயரன்பு வளரும்.

(க—ரை) எழைகளைக்கண்டு இன்னுரை பகர்ந்தழைத்து உதராக்கினியையணைத்து அனுப்பி வைப்பதுவே தருமமெனக் கண்டவர்கள் வாழ்வில் அரனருள் பிரகாசிக்கும்.

## நட்பு

**41.** கண்ணினிமைபோன்று காப்பர் கலங்காது
மண்ணுலகிற்கேற்ற துணை.

(க—ரை) கண்களை இமைகள் காப்பதுபோன்று உள்ளன்பும் சீரிய விசுவாசமுமுடைய நண்பர்கள், உயிருளவரை இணைபிரியா நின்று இன்னல்களைய முயலுவர்.

**42.** அங்கம் பொருளாவியாவும் சிதைந்தாலும்
தங்களகத்தன்பை மறவார்.

(க—ரை) தமது உடல் பொருளாவிகள் சிதைவதாயினும் அன்புறவுபூண்ட நண்பனுக்காபத்தேற்படுங்கால், மலரொடு கூடிய மணம்போன்று நின்று காப்பாற்றுவர்.

**43.** ஆதரவுகூறி அஞ்சாதே என்றுமன
வேதனையை நீக்கிவிடுவர்.

(க ரை) வாழ்விலேற்படும் உழல்நிலைகளைக்கண்டு வருந்தும்போதெல்லாம், அச்சந்தவிர்த்துத் திடங்கூறி உடனிருந்தாவன செய்து காப்பவரே நண்பராகும்.

**44.** தாரணிதனிற் பிறந்துதளரா உளமுடைய
வீரர்களைத் தோழரெனலாம்.

(க—ரை) இமயமலைச் சிகரமிடிந்து வீழினும், எமதிடது கரங்கொண்டு தடுப்பேனெனக்கூறும் உண்மையான வீரர்களையே தோழரென அறிந்துறவாடல் வேண்டும்.

## அரசு.

**49.** குடிபடைகள் போற்றுங்குணவான் அவனினிய
படியுலக ஆட்சிக்கரசு.

[க—ரை] செங்கோன் முறைக்கேற்பத் தமது குடி, படைகளைக் கண்காணித்து நியதிவழுவாதாட்சி புரிகிற அரசனை, மக்களனைவரும் தேவனெனப் போற்றுவர்.

**50.** செங்கோன்முறை தழுவியாளும் அரசனிடம்
மங்களமாய்த் தங்கும்குடி.

[க—ரை] ஆறிலொரு கடமை வாங்கி ஆக்ஞை செலுத்தி அரசு புரிகிற மன்னனிடம், மக்களன்பு கூர்ந்து அந்நாட்டை விட்டகலாது வசித்துவருவார்கள்.

**51.** அறிவிலுயரமைச்சு மரியதவ ஞானிகள்நன்
னெறிபுகலநிற்கும் நியதி.

[க—ரை] அறிவுத் தெளிவுற்ற மந்திரியும் அரியதவநிலடைந்த பெரியார்களும் மன்னவனருகிலிருந்தவ்வப்போது அரசியலிலட்சியம்கூற நீண்டநாள் அவ்வாட்சி நிலைபெற்றிருக்கும்.

**52.** அதிகமதியகில வாராய்ச்சி அன்புறுதி
எதிலுமிகை மன்னர்க்கழகு.

[க—ரை] சிறந்த நிபுணத்துவத் தன்மையும் ஜீவகாருண்ணியப் பெருக்கும், உள்ளகவுறுதியும், உலகநேர்மையும், ஆட்சியில் விழிப்பும் அரசுக்கழகுதரும்.

**109.** நியாயவழி தவறிச் சென்ருல் படுகுழியுள்
பாயவருமென்று கருது.

[க—ரை] நீதிவழியை மீறி நடக்க முற்பட்டால் முடிவில் கொடிய நமன் வாதனையாலுழன்று மடிய நேரிடுமெனக் கண்டு கொள்ளக்கடவது.

**110.** பேரின்ப மாகுறளைக் கற்று உணர்ந்தொழுகின்
பாரிலுயர் சீர்மை மிகும்.

[க—ரை] இப்பேரின்பக் குறளைக் கற்றுத் தெளிந்து சிந்தை வலுவுற்ற மக்களால், தேசம் சீரிய சிறப்புற்று, மாசகன்று, மாட்சிமையாகக் காட்சியளிக்குமென்பதுறுதி.

17. நமது தேச மக்கள் செழிப்புற்று வாழ்க்கைப் பூங்காவனத்தை வளர்ந்தோங்கச் செய்ய வேண்டுமெனின், ஆராய்ச்சிக் கூர்மையும், ஆவன செய்யும் வன்மையும், பிரகாசிக்க வேண்டுமேயல்லாது, சனசமுதாயக் கணக்கு மட்டிலும் உயர்வதினுல் புகழெய்தாது.

18. நாமின்றைய உழல்நிலைகளினூடு வகுத்துதவிய அருள் நிலையங்கள், புவிமுழுதும் பரவி வருகிற காலத்தில் உலக சமாதானம் நிலவுமே தவிர, வாக்காளர்களை மட்டிலும் பொறுக்கிக் கூப்பாடு போடுகிறதினுல், வேற்றுப் பிரிவு என்கிற தழும்பு மறைந்து விடாது. மறைந்தது போலத் தோன்றினும் மீண்டும் தலை தூக்கியே துன்புறுத்தும்.

19. நீங்கள் இக்கட்டத்தை மிகுந்த ஆலோசனைக் கெடுத்துக் கொள்வதோடு, அதற்குரிய நன்மார்க்கங்களையும் கண்டு பிடித்துச் சீர்திருத்தச் சிற்பிகளாகத் திகழுங்கள். இதற்கு உங்கள் சித்தத்திடனே சிறந்த உறுதுணையாகும்.

20. அரிய கடமைகள் புரியத்தூண்டும் பெரியார்களை அக மகிழ்வுடன் வரவேற்று, அன்பு மலரைச் சூடி உபசரிக்க வேண்டுவதிருக்க, நறுமணந்தந்தொரு கணத்தில் வாடி வதங்கும் மல்லிகை மலரை மட்டிலும் மாலையாகப் புனைந்து, கழுத்திலணிவித்துக் கரகோசமிட்டு அப்பெரியார் புகன்ற பொன்மொழிகளை மறந்து விடுவதினுல் மதிப்பொன்றுமில்லை.

21. முன்னின்று முகமன்பேசிப் பின்னின்று பிழை கூறுகிற மக்களை மிகுதியாகப் பெற்ற எந்த நாடும் வளங்குன்றி, அந்தகன் கைக்கோலையிழந்த தன்மை போன்று, திசைதடுமாறித் திண்டாடுமென்பதே சரித்திரங் கண்ட சான்ருகும்.

22. "விழித்தெழு மனிதா" என்ற வேதவாக்கை மறந்தபடியால், பழிப்புக்கிடந்தந்து பாரத புவி பல பிரிவினைக்குள்ளாகி முடிவில் இரணகளமாக மாறி, மானிட வர்க்கமே மடிந்கழிகின்ற தருணத்தையும் எதிர் நோக்கி நிற்கின்றது இதற்கினி யாது பரிகாரமென நீங்கள் ஆராய முற்படாதிருந்து விடுவீர்களானுல் இயற்கை யழகமைந்த மனித வாழ்க்கை, எமனுலக வாழ்க்கையாக மாறிக் குறைந்து மங்கிவிடும்.

23. குறுகிய தன்னல நோக்கத்தைப் பெரிதும் விரும்பி வசிப்பது, சமரச நேர்மையை மாற்றி விடுமேயெனச் சதா சிந்

அருள்பெருகி வளர்ந்து அன்புமயமாக மக்களை ஆதரித்து, ஆசி கூறிய காலங்கடந்து, பட்டுப் பீதாம்பரங்களையணிந்து, படாடோபத் தவங்கள் மிகுதியாகியபடியால், ஜீவசக்திகள் குறைந்து வருகின்றதைக் காணுகின்றோம்.

91. பாருலகக் கடமைகள் பலபிரிவாகக் காட்சியளிப்பினும், சற்கடமைகண்டு உடல் பொருள்களனைத்துமவைக்கீடில்லையென மதித்துத் துணிவுகொண்டு கடனாற்றுந் தூய்மைமனிதனைத் தெய்வீகப் புருடனெனவே கருதிப் போற்றலாம்.

92. விழலுக்கிறைத்த நீர்போன்று உங்கள் சக்திகளை வீண் காலப்போக்கிற் செலவிடாமல் இக்கலியுலக சகாப்த மனித சமுதாய வரிசையில் நீங்கள் முதலிடம் பெற்றுக்கொள்ளுங்கள். அதற்காகவே மானிட உடலெய்தியுள்ளீர்களென்பதை உணருதல் மேன்மையாகும்.

93. பகுத்தறிவோடுயரிய வழியில் வாழ்வைப் பயன்படுத்தத் தெரியாதபடியால், மக்கள் பண்பாடிழந்து உழல்கின்றனர். அதற்குரிய தென்பையளித்துச் சிறப்புடன் வசிக்கின்ற வகையுபதேசமும் புரிவதற்காக உங்களை நீங்கள் ஊக்கி, அகக்கோவிலை நன்று அலங்காரஞ் செய்துகொண்டுதான், அருளுபதேச அர்ச்சனைகளைப் புரிதல் வேண்டும்.

94. இப்புவியுலக வாழ்க்கையிலிருக்கும்வரை நீங்கள் உருக்கு மனிதர்களாக வசிக்கப் பழகி, உங்கள் உள்ளத்திடனைக் கண்டு தற்கால உலகம் அல்லலுற்றுவண்ணமியங்க வேண்டும். ஆபாச அசத்திய சக்திகளையெல்லாம் உங்கள் சத்தியச் சுடரால் சுட்டெரியுங்கள். வீரர் உயிர்வாழ்வது இவைக்கன்றி மற்றவைக்கன்று.

95. உங்கள் உணர்ச்சிப் பிரவாகத்திலிருந்தெழும் உத்வேகமே, இனிவரும் பெரியார்களாகிய நிகழ்கால இளைஞர்களுக்கு, நீங்கள் வகுத்துதவிய வன்மை மிக்க மார்க்கமாகுமென உணர்ச்சி விழி திறந்துய்யுங்கள்.

96. இவ்வுலக ஆடம்பர வாழ்விற்குரிய தனசேகரக் குவியல்கள், மலைமலையாகப் பெருகினும் அவைகளிலொரு மகிழ்ச்சியில்லை. உண்டு சுகித்து உப்பரிகையின்மீது சப்பிர மஞ்சத்தலையணை கொண்டமர்ந்திருப்பினும் பயனென்றில்லை. மாநில மக்களனைவரும் மகாத்ம மகுடமிட்டழைப்பினுமொரு மகிழ்ச்சியுண்டோ? இல்லை! இல்லை!! தன்னையும் தனது செயலையுமுணர்ந்து,

109. மேற்கூறிய கவன மில்லாவிடில், உயர்குணமுடைய உங்கள் போன்றோரையும், அதர்ம மனது சிதறியோடிச் சிலவிடய சூனிய மார்க்கங்களில் புகுத்தி வீண்காலப் போக்கிற்காளாக்கி, இகப்படகோட்டும் நிதானத் துடுப்பைப் பறிகொடுத்ததற்கொப் பாக்கிவிடும்.

110. முகவிழி திறந்துகாணும் உருவத்தோற்றங்களனைத்தையும் சமநிலை வடிவமாகச் சதா பாவனைசெய்யுங்கள். அப்படியாயின், நானென்ற அகங்காரக் கயிற்றால் பிணைக்கப்பட்டுள்ள எண்ணற்ற சிந்தனைகள் உங்கட்கிணங்கி, கணக்கற்ற கடிதடக் குழியில் இடறிவிழாதவண்ணம் பாதுகாத்து நிற்கும்.

111. இக்கட்டமாகிய, இகக்கட்டைச்சமாளிக்கவும் மார்க்கமுண்டு; அவைதானுங்கள் பற்றற்ற பரிசுத்த வாழ்க்கை. இன்பசாகரமெங்கிருந்து தயமாகின்றதெனக் காணும்போது நீங்களனுபவிக்கும் பல்வேறு இடையூறுகளிடையே தானென்பது உங்களொவ்வொருவரின் அனுபவத்திலிருந்தே உணரமுடியும்.

112. என்றுந் தளராத நம்பிக்கையை மேற்கொண்டு இகபரக் கடமைகளெவற்றினும் ஏகாக்கிர சித்தத் தெளிவுடன் தொடங்கி முடிக்க முயன்றால், யாதொரு தடையுமின்றி முடிவு பெறுமென்பது நிச்சயம்.

113. ஒருசிலர் சிறிய செயலையும் பெரிய மலையென மதித்து மனந்தளர்வது கண்டு, உங்களுயரிய சித்த உறுதியையும் உழல்நிலையுள் தள்ளிவிடாதீர்கள். கண்ணிமைகள் கடமை செய்யத் தாமே துடிக்கின்ற கருத்தாங்கிருக்கட்டும்.

114. நீங்கள் பரவடிவானந்தப் பாக்கியவான்களேயாம். அற்பமாகிய ஆயுள் படைத்த மட்டரக மானிடவடிவை நீங்களெனக் கருதிவிடாதீர்கள்! அறிவுமயமாகிய உங்களை நீங்கள் அறிவதில்லை; அறிந்தாலொருவித அச்சமில்லை.

115. மனோவாக்குக் காயமெனப் புகழும் அர்த்தசாராம்சங்கள் யாதெனக் காணமுயலாதிருந்து வருகிறீர்கள். அதை நாமுங்கட்குணர்த்துகின்றோம். உற்றுநோக்குங்கள். மனம் மறையும்; காயமழியும்; வாக்கு நிற்கும். இவையுணர்ந்து நீங்கள் சொல்லுறுதிகாத்து, பண்பட்ட நாடு புண்பட்டுழலாவண்ணம் காப்பாற்றுங்கள்.

116. சொல்லுறுதியின்றிய மக்கள் வைராக்கியத்திடனையிழந்து, ஆரோக்கிய சரீரமற்று ஆவனசெய்யமுடியாது திகைப்

ஒருசில மலமுருட்டி வண்டுகளோடு கூடியுறவாடுகிறபடியால் மனந்தடுமாறி யுழல்கின்றன. மக்களே! இவையுங்கட்குத் தக்க உபதேசமாகும்.

148. ஆன்ம கோடிகள் தழைக்க மழைபொழியவரும் இருள் மேகமொப்ப, புண்ணியவழிகளை வகுத்துதவ வந்து புவியிற்பிறந்த அவதார புருடர்களின் திருவசனங்கள், அருளருவி போன்றோடி வரும்போதெல்லாம், பராமுகமாகிய உடைப்பின்றித் தேக்கிச் சிதறவிடாமல், மனனமாகிய கண்மாயமுள் செலுத்திக் கவனமாகிய காவல் காத்து, சமயோசிதமென்னுந் தண்ணீரை அவரவர்கள் வாழ்க்கை வயலுக்குப் பாய்ச்சவேண்டும்.

149. பந்தபாசம் மிகுந்துள்ள அந்தகாரக் களைகள் சூழ்ந்து வாழ்க்கைப் பயிரைப் பாழாக்காதவண்ணம், பார்த்துக்கொள்வது உங்கள் கடன். மேற்சொன்னவாறு, கூரிய மதியுடைய மக்களாகிய நீங்கள் அறியாமையிருளென்ற வறுமை நீங்கி, மெஞ்ஞானசேகர அமுதமருந்தி அவியாநெருப்பென்னும் பவம் நீங்கப் பெற்று, ஆனந்தமென்ற அருளொளிவீட்டில் அமர்ந்திருங்கள்.

150. புறத்துறவுற்ற சில போலிகளை நம்பி ஏமாந்ததை எண்ணி யெண்ணி, அகத்துறவுற்ற பெரியார்களையும் சந்தேகித்து, விபரீத வியாக்கியானம் பேசுகின்ற பேர்வழிகளை அணுகாதகன்று, கிருபை வழிபற்றி வெற்றிகண்ட மெய்யடியார்களைக் கண்டணுகி வசித்தல் மிகுதியுமுங்கட்குப் புகழுண்டாக்கும்.

151. அருளுலகையடைந்த அடியார்களில் அருட்சோதி வள்ளல் இராமலிங்கரும், வீரவுணர்வுற்ற விவேகானந்தரும், சாந்த மூர்த்தியாகிய காந்தி மகானும், மார்க்கமுணர்த்திய முகம்மது நபியும், ஈசாம்சச் செல்வன் ஏசுநாதரும், சித்த செயம் பெற்ற புத்தபிரானும் போன்ற தேசாபிமானச் சீவன் முத்தர்களே மனத்துறவுடைய மகான்களாகும்.

152. பூமிக்குள் புதைந்த வித்துக்களனைத்தும் புத்துயிர் பெற்றோங்கி வளர்ந்து பயன்தருவதில்லை. சத்துள்ள வித்துக்களை பூதேவியேற்று அதனுருவடிவைக் கிரகித்து, அருவத்திலிருந்து வேறொரு உருவத்தை வெளித்தோன்றச் செய்து வெகு பலன் தருமாறு செய்கின்றாள்.

யத்தையே சதாகாலமும் உட்கொள்ளுங்கள். சகல வியாதிகளும் பறந்தோடிப்போகும்.

182. தபத்தை அபத்தமாக்கித் தரணியைத் தலைகீழாக்குங் கொடியகுணமார்க்கத்தை யறவேபோக்கி, விண்ணின்றொளிரும் மின்னொளிபோன்று தன்னுளிலங்கும் பொருளொடு கலந்து கரைந்து உருவற்று ஒன்றாகிவிட உங்கட்குப்போதிய சக்தியுண்டாகும்போது, பேச்சற்றபெருமைகூட லபிதமாகும்.

183. பிறவாவரம் பெறக்கருதிய பெரியார்கள் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார்களெனக் கணித நூலாராய்ச்சியின் புகழ்ச்சியாகும். அவையாவெனக் காணமுயலும்போது, அறிவு மயமாகிய அவரவர்களும் ஆத்மலிங்கத்தை வலஞ்சுற்றி வர வேண்டுமெனச் சொன்னவேதமாகும்.

184. இவைகடந்தபடியால், மங்களமாக எங்கும் நிறைந்துள்ள உங்களைப்பங்குபோடக்கருதிய பாழான மனது மேலான நிலையில் நிற்கவொட்டாமற்செய்து, நாள்தோறும் நரகவழிகளை நல்வழிகளெனக்காட்டி அரிய பிறவி ஆபாசமாக்கப்படுவதை நினைந்துநினைந்துருகி நெருப்புமயமாக இருக்கப்பழகுங்கள்.

185. பிறப்பையுமிறப்பையும் நோட்டமிடுங்கால், அச்சமெதிலிருந்து உதயமாகுமோ அதனுள் அகில சுகபோகங்களும் அடக்கமாகும். கட்டுக்கடங்காத காமக் குரோதாதிகளைச் சத்துருக்களெனக்கருதி நாசஞ்செய்து ஜெயந்தரத்தக்க சாலச்சிறந்த ஆயுதம், யாம் கற்றுக்கொடுத்த பரப்பிரம்ம சைதன்யபாணப் பிரயோகமேயாகும். ஏனைய மார்க்கங்களெதுவும் எளிதாகாது.

186. உருவவடிவமொருநாள் அழிந்தொழியும். உள்ளான்ம சக்தியாகிய நீங்களொருபோதும் மாயமாட்டீர்கள். இவைபற்றிப்பேச எவருக்கும் நாவெழாதுபோவது சகசமேயெனினும், நாமின்றி வேறொன்றில்லையெனக்காணும் முடிவையுடையவர்களுக்கு எளிதில் பழுதகன்றுண்மை பிரகாசிக்கும்.

187. கூர்மைமழுங்கிய ஆயுதங்களைப்போன்று உங்கள் ஐம்புலன்களும் சேட்டைபுரிகிற தருணங்கண்டு, அவ்வப்போது அறிவுச்சுடரொளியென்னும் சாணையில் தீட்டித் தீட்சண்யமுறச் செய்துகொள்ளுங்கள். இல்லையேல் நல்லவைபோன்று சிறிதின்பந்தந்து பலதொல்லைகளைப் புகுத்தித் துன்புறுத்தும்.

188 தனதுபுலன்களை அடக்கியாளத் திடவன்மை கிடையாதபோது பிறர்புரியும் குறைபாடுகளைத் திருத்த முயலுதல் பலிதமாகாது. முயன்றும் பயனின்றியலைவர் சிலர். இவை நிகழ்கால நிலையறியாத மக்களின் தன்மையாகும்.

189. திலதமிடுதலும் திருநீறணிதலும் மலமாயையறத்தவம் புரியும் பக்தர்களின் சின்னங்களாகும். இவையுணர ஆற்றலின்றிய ஒருசிலர் பஞ்சாட்சர தூளி தங்களைச் சாற்றிச் சங்கையிழந்து பங்கமடைகிறார்கள். அவர்களுக்குமுங்கள் அன்புததும்பிய அருள் மொழிகளைப் பங்கிடு செய்து உதவி தவநெறிதழுவ வழிகாட்டுங்கள்

190 உங்களை நீங்கள் விட்டு விலகினால் அறவழியில் ஓரணுவளவேனும் நன்மையடையவியலாதுபோகும். மகிதல மாறாட்டங்களிலொன்றாகிய மாந்திரீகத்தை மனத்திடனாகவும். சோதிடத்தைச் சக்தியாகவும், பண்டிதத்தை பேரறிவெனவும், பரதத்தை புலனமைதியெனவுங்கருதி அகவெளியுள்ளமர்ந்து ஆனந்த நித்திரைபுரிதலே முமூட்சுத்வ மார்க்கமாகும்.

191. முகக்கண்முன்தோன்றி யொளிரும் சைதன்னிய வடிவை நாளொருமுறை சிலநிமிடமேனும் அலையும் மனதை அமைதியுறச்செய்து பார்த்துவந்தாலென்ன? மண்ணையும் மரத்தையும், பெண்ணையும் ஆணையும் பார்க்கப் பழக்கிய கண்களை விண்ணைப் பாரெனச்சொன்னால் சாத்தியப்படாதென்பதும் உண்மையே! தன்னையறிய முயன்றவர்களுக்கே அன்னிலையில் நிற்க முடியும்.

192. இருகரிய விழிகளுக்கிடையில் நின்றிலங்கும் அறிவு மயமே நீங்களாகும். சிவான்மாக்களனைத்திலும் அன்பு மயமாகவே அமர்ந்திருக்கின்றீர்கள். அசையாத பரப்பிரமமாகிய நாமே அசையுமுருவச் சட்டையைப் போர்த்துள்ளோமென வுணர்ந்து உயிர்மயமாகத் தொழிலாற்றுங்கள்.

193. சாந்தகுணமும் சன்மார்க்க நாட்டமும் பெற்று மனக்குரங்காட்டமுஞ் சிறிதடங்கி நடக்க அவாவுடையவர்களாகிய நீங்கள், உருளைக் கிழங்கிலும் உயிரில்லையாவெனக் கேள்விபோடும் பேர்வழிகளைப் பின்பற்றிவிடாமல் சதா சைவாம்ச உணவுகளையே உண்ணவேண்டுவதவசியமாகும்.

194. நல்வழி தழுவிய மக்கட்கு அருளைப் பகிர்ந்துதவி அறவழி காட்டவுந் தயங்க மாட்டோம். தவழ்ந்து மெழுந்தும்,

**மாணவன்:-**

மதிவளராத மக்களை மயக்கும் மாபாதக மனிதர்களை நல் வழிப்படுத்துவதோடு, நாட்டு நலனுக்கேற்ற நற்பணிகளிலும் ஈடுபடுவேன்,

**குரு:-**

செல்வ! உலகிற்கணக்கிட முடியாத கபட வேடதாரிகள் செய்யும் சூழ்ச்சிகளைக் காலச்சக்கரத்திற் சிக்கிச் சுழலும் மக்கள் வரவேற்கக் காத்திருக்கும்போது, உனதெண்ணம் குறைவின்றி நிறைவேறுமாவெனச் சிந்தித்துப் பார்ப்பது மிக முக்கியமாகும்.

**மாணவன்:-**

முடியாத காரியம் படிமிசை கிடையாதென்பது இச் சிறியே னுடைய உளந்தளரா நம்பிக்கை. எனினும், அநுபவம் நிறைந்த ஆன்றோர் வழிகாட்டியாக அமைதல் சாலச்சிறந்தது.

**குரு:-**

பேசுவதெல்லாம் பிரணவ மொழிகளெனக் கூறுவதில் யாது பயன்! சொல்லழகினும் செயலழகே பன்மடங்கு உயர்வானது என்பதை மறவாதே.

**மாணவன்:-**

ஐயனே! சொல்லுஞ் செயலும் ஒன்றுபட்ட உத்தமர்கள் புரிந்த தொண்டின் பயன் யாது?

**குரு:-**

தேடிச் சுகித்துச் செத்தழிந்து போகும் வலியிழந்த வாழ்வை ஒரு பொருட்டாயெண்ணாது, அறப்பணிகளிலீடுபட்ட அறவோ ரின் திருநாமங்கள் உலகுள்ளவரை நிலைபெற்று நிற்பதே அவர் கள் தொண்டின் வெற்றியாகும்.

## 2. வாழ்க்கை நோக்கம்

**மாணவன்:-**

ஐயனே! இல்வாழ்வை மேற்கொண்ட மாந்தர், எத்தகைய இலட்சியத்தைக் கடைபிடிக்க வேண்டும்?

**குரு:**

குழந்தாய்! பரோபகாரப் பணிக்காகத் தோன்றிய ஊனு டலைத் தனக்கென இயக்கி இகழ்வும் இடையூறும் பெறுமல், புனி தப்பணி புரிந்து புகழுடலொடு வாழ்வதே இல்வாழ்வோரின் குறிக்கோளாயிருக்க வேண்டும்.

13. பஞ்சமா பாதகத்தின் பற்றகன்ற பக்தனுக்கு
நெஞ்சில் இறை நிற்கும் நிறைந்து.

(க—ரை) மக்கள் மனதை மாற்றி அமைக்கும் மாபாதகச் செய்கையை இப்படிமிசை வெறுத்த பக்தனின் இதயத்தில் இயற்கையழகு இடை விடா தியங்கும்.

14. கோபம் கொலை காமம் கொள்ளை குடி சூது
ஆபத்தை உண்டாக்கி அழிக்கும்.

(க—ரை) மதியை மயக்கிப் பொருளை இழக்கச் செய்கின்ற பொல்லாத முறைகளை நல்லவையெனக் கையாளும் எவரும் முடிவில் கொடிய அபாயத்திற்காளாவர்.

15. ஆர்வமிகு பண்பும் அறத் திறனும் உண்டாகிப்
பார்திகழச் செய்க பணி.

(க—ரை) அறநெறி உணர்வும், ஆத்மீகப் பண்பும் வளர்ச்சியுற்றபிறகு புவிப் பணியாற்றப் புகழுண்டாம்.

16. இரக்கமிலான் வாழ்வில் இன்பமிலை துன்பமது
நரகக்குழிக்குச் செல்ல நகர்த்தும்,

(க—ரை) ஈகை கிடையாதவன் இதயத்தில் கவலைப் புயலானது சுழலப்படுவதால் பரசுகமற்ற பள்ளத்துள் தள்ளப் படுவான்.

17. சொற்றிறமையாளன் சுகம்தனக் கென்றெண்ணுதான்
வெற்றிமிகக் காண விழைவன்.

(க—ரை) பயன்பட்ட மொழிகளைப் பகர்ந்து, சுயசுகம் வெறுத்த தொண்டன் ஒருவனே வீரப் பணியாற்றி வெற்றியைத் தேடித் தரத் தக்கவனுவான்.

18. வன்மொழியன் காமவிழியன் வழிகாணுன்
இன்னுயிரைக் கொல்லும் இயமன்.

(க—ரை) கடுமையான மொழியும், காம விகாரப் பார்வையும் நன்னெறி உணராத நாஸ்திக நடையும், உடைய மனிதனை, மன்னுயிரை வதைக்கும் எமனேடு ஒப்பிடலாம்.

19. ஆசாரம் தங்க அருள் ஒளிரும் அவ்வமயம்
கூசாமல் ஓடும் குறை.

(க—ரை) ஒழுக்கமிருக்க உள்ளொளி உண்டெனவுணர்ந்து நடைபிசகாது திகழும் நல்லவரிடத்து, குறைகள் அணுக இடமிராதெனக் காண்க.

71. வாலிப சிங்கங்கட்கு தங்கமே தங்கம் —எதிர்காலச்
சோலி ரொம்ப உண்டுமடி தங்கமே தங்கம்.

72. யுத்த முனையிலேதான் தங்கமே தங்கம் - போர்வீர
சித்தரென்று பேர் பெறணும் தங்கமே தங்கம்.

73. வருங்காலப் போர்ப்படலம் தங்கமே தங்கம். - அதிக
அருகிலிருக்குதடி தங்கமே தங்கம்.

74. சித்தத் தழுச்குடையோர் தங்கமே தங்கம் -உயர்ந்த
முத்தர்கள் நிலையறியார் தங்கமே தங்கம்

75 வாய்வேதமே பொழிந்து தங்கமே தங்கம் - முடிவில்
பேய்போலலேவாரடி தங்கமே தங்கம்

76. கோபக் கொடுமையினுல் தங்கமே தங்கம் - கொடிய
பாபச்சுமை உயருந் தங்கமே தங்கம்.

77. பொல்லாத பாவிகள்தான் தங்கமே தங்கம் - உலகில்
இல்லாததைப் புகழ்வர் தங்கமே தங்கம்.

78. பித்துப் பிடித்தலேதல் தங்கமே தங்கம் - ஜீவன்
முத்தருக் கிதுதகுமோ தங்கமேதங்கம்

79. ஆலமர நிழல்போற் தங்கமே தங்கம் - நமக்கு
கால நிலே கைதருமா தங்கமே தங்கம்

80. ஈருயிரு மோருயிராய் தங்கமே தங்கம் - இருந்தால்
யாருனேத் தடுப்பவர்கள் தங்கமே தங்கம்

81. பொய்யாத மெய்தனிலே தங்கமே தங்கம்—நாமே
துய்யமணி போலொளிர்வோம் தங்கமே தங்கம்.

82. கண்ணிமையா நாட்டமுற்றுல் தங்கமே தங்கம்—நாம்
விண்ணிலே உலாவலாமே தங்கமே தங்கம்

83. மட்டி மனமதனேத் தங்கமே தங்கம்—ஓடாமல்
கட்டிவைக்க மார்க்கமுண்டு தங்கமே தங்கம்.

84. உந்தியினுள் சிந்தனையை தங்கமே தங்கம்—செலுத்த
சந்தடி செய்யாதடங்கும் தங்கமே தங்கம்.

85. தேடாத் திரவியத்தை தங்கமே தங்கம்—தன்னுள்
நாடவே கிடைக்குமடி தங்கமே தங்கம்.

86. மாருட்டப் பேயரொடு தங்கமே தங்கம்—வாதிட்டு
போராட்டஞ் செய்யலாமோ தங்கமே தங்கம்.

87. சுகதுக்கம் இரண்டினேயும் தங்கமே தங்கம்— பகுத்துப்
பகலிரவு போலுணர்வாய் தங்கமே தங்கம்.

88. ஏழைகளாய் வாழ்ந்திடலாம் தங்கமே தங்கம் -உலகில்
கோழையென்றிருக்கலாமோ தங்கமே தங்கம்.

## பிழைத்திருத்தம்.

| பக்கம். | பாட்டு அல்லது பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 6 | 28 | தலை அங்கம் | சொருகிலோர் சூகமில | சொருகிலோர் சுகமில. |
| 7 | 32 | 4 | ரூபந்திலுயிர் | ரூபத்திலுயிர் |
| 8A | 43 | 1 | தேசிகன் | தேசிகன் |
| 9 | 45 | தலை அங்கம் | கிதழ் தடை | திகழ் தடை |
| ,, | 46 | , | பெண்ணுனுடம்பெலாம் | பெண்ணுனுடம்பெலாம், |
| 14 | 59 | 3 | துஞ்சூவர் | துஞ்சுவர் |
| ,, | 61 | 9 | சாத்தமே | சாந்தமே |
| 16 | 67 | 5 | மகத்துவமிக்கத் தவத்தை | மகத்துவமிக்க தவத்தை |
| 22 | 85 | 11 | கூறும் | கூறுய் |
| 25 | 92 | 4 | சத்த முழுமூடர் | சுத்த முழுமூடர் |
| 35 | — | 31 | தவம்புரிவாபகா! | தவம்புரிவாயாக! |
| 36 | — | 26 | விசுவாதத்தை | விசுவாசத்தை |
| 37 | — | 26 | நிராணனே | பிராணனே |
| 40 | — | 20 | லஞ்சகமற்ற | வஞ்சகமற்ற |
| 45 | — | 8 | தவறிவிடாது | தவறிடாது |
| 47 | — | 25 | துவாராடை | துவராடை |

# பிழைத்திருத்தம்.

| பக்கம். | பாட்டு அல்லது பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 47 | — | 29 | அறிகுறி | குறி |
| ,, | — | 34 | மெஞ்ஞானி | மெய்ஞ்ஞானி |
| 73 | — | 6 | மேல உதறவும் | வழைத்து மார்பை உயர்த்துதல் |
| 81 | — | 30 | இறைவா | இறைவா நீ |
| 112 | 12 | 4 | பிறதமாண்பை | பிறந்த மாண்பை |
| 120 | 38 | 1 | உடைமையும் | உடையும் |
| 152 | 115 | 2 | பேரின்பத்தேனை | பேரின்பத்தேனை |
| 159 | 18 | 4 | வேற்றுப்பிளவு | வேற்றுமைப்பிளவு |
| 184 | 182 | 3 | க்லந்து | கலந்து |
| ,, | 185 | 2 | சுகபோசுங்களும் | சுகபோகங்களும் |
| 187 | 204 | 4 | விண்ணுலகவெளியில | விண்ணுலகவெளியில் |
| 192 | 7 | 1 | நாட்டும்பணி | நாட்டுப்பணி |
| 198 | 50 | 2 | பரதேசியாக்கிய | பரதேசியாகிய |
| 205 | 99 | 1 | இவ்வுருவ உடலதில் உலவதார | இவ்வுருவ உலகில் உடலவதார |
| ,, | 101 | 2 | உன்னிடமிருக்கயைில் | உன்னிடமிருக்கையில் |
| 208 | 123 | 3 | கருங்கல்லாக்கிய | கருங்கல்லாலாக்கிய |
| 224 | 35 | 3 | குழப்பமுற்று | குளப்பமுற்று |

இந்தத் திருத்தங்களைத் தவிர வேறு புதிய திருத்தங்களிருந்தால் அவைகளை வாசகர்கள் திருத்தி வாசித்துக்கொள்ளும்படி தயவாகக் கோருகின்றனம் — **ஆசிரியர்.**

